ஆனந்தா
ஊடக உலகம்

# உள்ளே . . .


| | | |
|---|---|---|
| 03 | ஆசிரியரிடமிருந்து... | |
| 04 | ஆய்வும் சுயஆய்வும் | கடின உழைப்பு — அருள்பணி. ஜெ. மரிய அந்தோனி |
| 06 | இம்மாதச் சிறப்பு | அன்பே உங்கள் வாழ்வுக்கு ஆணிவேரும் அடித்தளமுமாய் அமைவதாக! — அருள்பணி. லூர்துராஜ் |
| 16 | நலவாழ்வு | கடுகு — அருள்சகோதரி. லடிஸ்கா ரோஸ்லின் |
| 18 | சிந்தனை பகுதி | இந்தியாவை வளர்த்தொடுத்த கிறித்தவம் — திரு. ச. ஜெயராஜ் |
| 24 | மனமாற்ற சாம்பலும் உயிர்த்தெழும் அருளும் | திருநீற்றுப்புதன் — மாரா |
| 27 | மறைமாவட்டச் செய்திகள் | |





வெளியிடுபவர்

மேதகு முனைவர் **லூர்து ஆனந்தம் D.D.**
சிவகங்கை மறைமாவட்ட ஆயர்

ஆசிரியர்

அருள்பணி. **அ. அந்தோனி எட்வர்ட் ராஜ்**
✆ 7558175669

ஆசிரியர் குழு

அருள்பணி. **S. செபஸ்தி**
அருள்பணி. முனைவர் **R. மரிய டெல்லஸ்**
அருள்பணி. முனைவர் **M.R. சேசு**
முனைவர் **ஸ்டீபன் மிக்கேல்ராஜ்**
திரு. **சோமசுந்தர பாரதி**

ஆலோசகர்கள் குழு

அருள்பணி. **A. சிங்கராயர்**
அருள்சகோ. **அகஸ்டின்**
திரு. **வெட்டிவயல் வளவன்**
திரு. **அலெக்ஸாண்டர்**
திரு. **வியாகுல சந்தியாகு**
திருமதி. **மேரிபாரதி**

அலுவலகம்

**ஆனந்த கங்கைத் தூது**
வியான்னி அருள்பணி மையம்
மதுரை சாலை, சிவகங்கை – 630 561

தொடர்புக்கு

மாதா டிவி : 7558175669
கங்கைத் தூது : 7558175669

மின்னஞ்சல் : anandacommunicationsvg@gmail.com

அலுவலக நேரம் : காலை 9.30 – மாலை 4.30 வரை

சந்தா விபரம்

| | |
|---|---|
| ஆண்டு சந்தா | – ₹ 150 |
| ஆயுள் சந்தா (12 ஆண்டுகள் ) | – ₹ 1,500 |

விளம்பரக் கட்டணம்

| | |
|---|---|
| பின்பக்க அட்டை | – ₹ 6,000 |
| அட்டை உள்பக்கம் | – ₹ 5,000 |
| முழுபக்கம் | – ₹ 3,000 |
| அரைப்பக்கம் | – ₹ 1,500 |


உங்கள் மேலான படைப்புகள்
வந்துசேர வேண்டிய கடைசி நாள்
**12.02.2026**

மார்ச் மாத தலைப்பு
**"உள்ளே வாருங்கள்"**

இதழ் சந்தா / மாதா தொலைக்காட்சி நன்கொடையினை வங்கியில் செலுத்த :

| | |
|---|---|
| **Bank Name** | : Canara Bank, Sivagangai |
| **Account Name** | : Communication Commission |
| **A/c. No.** | : 5157101011835 |
| **IFS Code** | : CNRB0005157 |

குறிப்பு : தங்கள் சந்தாவினை புதுப்பிப்பவர்கள் பெயர், சந்தா எண், முகவரியைத் தெளிவாகக் குறிப்பிடவும். வங்கியில் செலுத்துபவர்கள் விபரங்களை SMS செய்யவும்.

# ஆயரின் பணித்திட்டம்



| | | |
|---|---|---|
| 01 | கா | கஸ்பார் நகர் கொடியேற்றம், உறுதிபூசுதல் திருப்பலி |
| | மா | முத்துப்பேட்டை திருவிழாத் திருப்பலி |
| 02-03 | | பெங்களூரு CCBI கூட்டம் |
| 04-10 | | பெங்களூரு CBCI கூட்டம் |
| 11 | கா | அண்ணா நகர் வெள்ளி விழாத் திருப்பலி |
| | மா | திண்டிவனம் திருவிழா திருப்பலி |
| | | |
| 15 | கா | வியான்னி தம்பதியர்கள் கொண்டாட்டம் |
| 16 | | மதுரை செங்கோல் நகர் திருமணத் திருப்பலி |
| 17 | கா | அமராவதிபுதூர் குழந்தைகள் காப்பகக் கட்டிடம் திறப்பு விழா |
| | மா | காளையார்கோவில் நல்லாயன் பால்பண்ணை – அர்ச்சிப்பு |
| 18 | | பேராலயம் – திருநீற்றுப் புதன் திருப்பலி |
| 20 | | ரஸ்தா தவக்காலத் தியானம் – திருப்பலி |
| 25-27 | | திருச்சி, கருமாத்தூர், நாகர்கோவில் – ஆயர்கள் கூடுகை |
| 28-01 | | வல்லனி மேய்ப்புப் பணி சந்திப்பு |




✝

நான் பசியாய் இருந்தேன். நீங்கள் உணவு கொடுத்தீர்கள். (மத் 25:35)



**ஆனந்தா**

**நண்பகல் உணவுத்திட்டம்**

**சிவகங்கை மறைமாவட்டம்**

**நீங்களும் எம் கனவுத் திட்டத்தில் பங்கேற்கலாமே!**



**பகிர்வோம்**
**பசிபோக்குவோம்**

**ஆனந்தா மதிய உணவுத் திட்ட வங்கிக் கணக்கு விபரம்**

| | | |
|---|---|---|
| A/C No. | : | **99 90 25 12 15 08 59** |
| A/C Name | : | **ANANDA CHARITABLE TRUST** |
| IFSC Code | : | **HDFC0002576** |
| Branch | : | **SIVAGANGAI** |
| Bank | : | **HDFC** |

# ஆனந்த கங்கை தூதுவிடமிருந்து...

ஆனந்த கங்கை தூதுவின் இனிய இதயங்களே அனைவருக்கும் வாழ்த்துக்களும் வணக்கங்களும். "என் வேதம் என் தவம்" என்னும் இம்மாத இதழ் வழியாக மீண்டும் உங்களிடம் வந்தடைவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். நான் பிடித்த முயலுக்கு மூன்று கால்கள் தான், நான் பார்த்த கொக்குவிற்கு ஒற்றைக் கால்தான், நான் செய்தது தான் சரி, என் வார்த்தைதான் வேதம், என் செயல் தான் தவம் என்று வாழும் மனங்களை சற்றுப் பக்குவப்படுத்த இதோ ஒரு வழி.

ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம் எனத் தொடங்கிய இவ்வாண்டில் நாம் அனைவருமே இன்னும் சில தினங்களில் தவக்காலத்தில் அடியெடுத்து வைக்க இருக்கின்றோம். அந்தத் தவக்காலத்தில் வேதம் – இறைவார்த்தையை, தவம் – அறச் செயல்களை எப்படிச் சந்திக்கப் போகின்றோம், எப்படிக் கையாளப்போகின்றோம் என்பதற்கு ஒரு ஆன்மீக வழிகாட்டியாக அமையவிருக்கிறது இம்மாத இதழ்.

அழுத குழந்தையைக் கையாளத் தெரிந்த நமக்கு, தவறு செய்த குழந்தையை தண்டிக்கத் தெரிந்த நமக்கு – பிறரை அழாமல் இருக்க வைக்கத் தெரியுமா? பிறருக்கு எதிராக தவறிழைக்காமல் இருக்க முடியுமா?

விடுமுறையை ஆனந்தமாகக் கொண்டாடும் நமக்கு, பணத்தை ஆடம்பரமாகச் செலவு செய்யத் தெரிந்த நமக்கு – ஆதரவற்றவர்களை ஆனந்தமாக வைத்துக்கொள்ள முடியுமா? தேவையில் இருப்போருக்கு உதவிக்கரம் நீட்ட முடியுமா?

"பெரியோர்களை மதித்து நட" என்று சொல்லும் நாம், பெரியவர்களை அரவணைத்து வாழு என்று கூறும் நாம் – நம்மோடு இருக்கும் வயது முதிர்ந்தவர்களை நாம் மாண்போடும் மரியாதையோடும் நடத்துகின்றோமா?

அனைவரின் கைகளிலும் தொலைபேசி. அனைத்துக் கண்களுக்கும் தொலைக்காட்சி. அனைத்து கால்களுக்கு நடைப்பயிற்சி.

முகம் பார்த்து பேசுதல் இல்லை. மனங்களைப் பார்ப்பதே இல்லை. உறவு வாழ்வே இல்லை. இப்படிப்போய்க் கொண்டிருக்கின்றது நம் வாழ்க்கை. இத்தவக்காலத்தை சரியாகக் கடைப்பிடித்தால் அனைத்தையும் சரிசெய்யலாம். சரியாகவும் வாழலாம்.

40 நாட்களில் 40 புனிதர்கள் அல்லது 40 திருப்பாடல்கள் அல்லது 40 இறைவார்த்தைகள் அல்லது 40 நன்மைகள் செய்தல் அல்லது 40 நோயாளர்களைச் சந்தித்தல் அல்லது 40 முதியவர்களுக்கு ஆறுதல் கூறதல் இவற்றில் ஏதாவது ஒரு செயலை என் வேதம் என் தவம் என்று இத்தவக்காலத்தில் செய்யலாமே!

கடவுள் மனித உள்ளத்திற்காக பேராவலோடு காத்திருக்கிறார் . . .

இயேசுவின் அன்பில்
அருள்பணி. **அ. அந்தோனி எட்வர்ட் ராஜ்**
செயலர், ஊடகப் பணிக்குழு,
சிவகங்கை மறைமாவட்டம்.

நீமொ 8:23 **தொடக்கத்தில், பூவுலகு உண்டாகுமுன்னே, நானே முதன் முதல் நிலைநிறுத்தப் பெற்றேன்.**

# கற்க கசடற தமிழ் வழியில்...

உலக தாய்மொழி தினம்

நல்லாசிரியர் கவிஞர். எல். பிரைட்

தாய்மொழி வழிக்கல்வியே மிகச்சிறந்த கல்வி என உலகில் பல்வேறு நாடுகளிலும் நிரூபிக்கப்பட்டுள்ளது. தாய்மொழி வழிக்கல்வியை மேற்கொண்ட பல்துறை தமிழர்கள் பலரும் பெரும் சாதனையாளர்களாக வலம் வந்திருக்கிறார்கள்.

முதலில் தாய்மொழி வழிக் கல்வி தேவையா? தேவையற்றதா? என்கிற விவாதமே தேவையற்றது. பெற்ற தாய் வேண்டுமா, வேண்டாமா? என்ற கேள்வி பிள்ளைகளுக்கு எழுவதே உணர்வுப்பூர்வமானாலும் சரி அறிவுப்பூர்வமானாலும் சரி நியாயமற்றது. தாய் என்கிற உறவும், தாய்மொழியும் ஒரே உயிரைப் பெற்றுள்ள இரண்டு வடிவங்கள்தான்.

தமிழ் ஒரு மிகுந்த மேன்மையான பண்படுத்தப்பட்ட மொழி. இம்மொழி நாட்டின் பழம்பெரும் இலக்கிய வளம் உடையது என்கிறார் வடமொழியை ஆய்வு செய்த ஜெர்மானிய அறிஞர் மார்க்ஸ்முல்லர். தமிழ்மொழிக்கு இயற்கையிலேயே உள்ள ஈர்ப்பு சக்தியின் காரணமாகத்தான் அயல்நாட்டு அறிஞர்களாகிய சி.யு.போப், கால்டுவெல், வீரமாமுனிவர், சுகன் பால்கு ஐயர், ராபர்ட் டி நொபிலி போன்றவர்கள் தமிழைக் கற்பதோடு நிறுத்திக் கொள்ளாமல் அவற்றில் மொழிச் சீர்திருத்தமும் தேன் சுவை சொட்டும் இலக்கியங்களும் படைத்துப் பெருமை அடைந்தனர்.

பொருளாதாரத்தில் முன்னேறிய நாடுகளாகக் கருதப்படுகிற, ஜெர்மனி, ரஷ்யா, ஜப்பான், பிரான்ஸ், இத்தாலி, சீனா, கொரியா போன்ற நாடுகளில் தாய்மொழி வழிக்கல்வியே பின்பற்றப்படுகிறது. 1970-களில் இருந்தே ஈழத்தில் மருத்துவம், பொறியியல் போன்ற தொழிற்கல்விகளை தமிழர்கள் தமிழிலேயே பயில்வதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது.

மேற்கு வங்கம், குஜராத், கர்நாடகம், கேரளம், மகாராஷ்டிரம் முதலான மாநிலங்களில் மாநில மொழியைக் கற்காமல் யாரும் மேல்படிப்புக்குப் போக முடியாது. தமிழ்நாட்டில் மட்டுமே தமிழில் அ, ஆ தெரியதவர்கள் கூட முனைவர் பட்டம் வரை சென்றுவிடமுடியும். சிங்கப்பூர், மலேசியா, இலங்கை போன்ற அயல்நாடுகளில் எல்லாம் தமிழ் ஆட்சிமொழி, ஆனால் தாய்வீடான தமிழகத்தில் தமிழன் நிலை பரிதாபமாக உள்ளது.

ஆங்கிலம் தேவையா? தேவை தான். உலக மொழியாக இருக்கிற காரணத்தால், பல்வேறு நாடுகளில் கண்டுபிடிக்கப்பட்ட அறிவியலை, படைக்கப்பட்ட இலக்கியங்களை, எழுதப்பட்ட வரலாற்றைப் படித்துத் தெரிந்து கொள்ளப் பயன்படும் மொழி என்ற அளவில் ஆங்கிலம் போதுமானது. தமிழக அரசின் பாடத்திட்டத்தில் ஆங்கிலம் ஒரு பாடமாக வைக்கப்பட்டுள்ளது.

ஆங்கில மொழியை எழுதவும், பேசவும் கற்றுக்கொள்ளவும் விரும்புகிறவர்கள் இந்த வாய்ப்பையே சரியாகப் பயன்படுத்திக் கொள்ளலாமோ? அனைத்துப் பாடங்களையும் ஆங்கிலத்தில் தான் கற்கவேண்டும் என்ற நிலைக்குப் போகும் போது, அது, நமது தாய்மொழியாகிய தமிழின் செல்வாக்கைக் குறைத்து, ஆங்கில மொழியின் ஆதிக்கத்துக்கு வழிவகுத்துவிடாதா?

மேலும் வீட்டில், விளையாட்டுத்திடலில், நண்பர்களிடம் பேசுகையில் காதலிக்குக் கவிதை எழுதுகையில் தாய்த்தமிழ் வேண்டும். படிப்பதற்கு மட்டும் ஆங்கிலம் வேண்டும் என்றால் அது எவ்வளவு பெரிய முரண்பாடான மனப்போக்கு?

மொழி என்பது கல்வி சார்ந்த பிரச்சனை மட்டுமல்ல. அம்மொழி பேசுகிற இனத்தின் நாகரிகம், பண்பாடு, கலாச்சாரம் ஆகியவற்றைப் பிரதிபலிப்பதுமாகும். அந்த வகையில் ஆங்கில மொழியின் ஆதிக்கத்தை வளரவிடுவது, பாரம்பரியம் மிக்க, பழமைவாய்ந்த நமது தமிழர் நாகரிகத்தையும், பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் நாமே குழிதோண்டிப் புதைப்பதற்குச் சமமாகாதா?

இந்த சிந்தனையின் அடிப்படையில் தான் தாகூர், தனது "கீதாஞ்சலி" கவிதை நூலை, தாய்மொழியான வங்காள மொழியிலேயே முதன் முதலில் எழுதினார். காந்தியடிகளும் தனது சத்தியசோதனையை குஜராத்தி மொழியிலேயே படைத்தார். 1956-ம் ஆண்டில் இந்தியா மொழிவாரி மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டதும் இந்த உயர்வின் அடிப்படையில் தான்.

ஆங்கிலத்தில் படித்தால்தான் அதிமேதாவிகளாக உருவாக முடியும் என்கிற மாயை சிலரால் திட்டமிட்டே உருவாக்கப்பட்டு அதே தவறான கருத்து மக்களிடமும் நிரம்பி உள்ளது.

அறிவியல் அறிஞர்களான அப்துல்கலாம், வ.செ. குழந்தைச்சாமி, மு.ஆனந்தகிருஷ்ணன், ஆதிசேஷைய்யா, மருத்துவர் பி. ராமமூர்த்தி, ச.முத்துக்குமரன் போன்றவர்கள் சாதாரண கிராமத்துப் பள்ளிக்கூடங்களில் படித்து உயர்நிலைக்கு வந்தவர்கள் தான். அவர்கள் பெரும் சாதனையாளர்களாக உருவாவதை எந்தவிதத்திலும் தமிழ்வழிக் கல்வி பாதிக்கவில்லை. மாறாக வளர்த்திருக்கிறது.



இன்னும் ஓர் ஆச்சர்யமான செய்தி என்னவென்றால், தமிழ் இலக்கணமானது கணிப்பொறிக்குரிய கணிதத் தன்மையோடு ஒத்துப்போகிறதாம்.

இது வேகமாக வளர்ந்துவரும் கணினி யுகம் என்பதால் நாளை உலகத்துக் கணிப்பொறிகளிலெல்லாம் நமது தாய்த் தமிழே அதிக செல்வாக்குப் பெற்றிருக்கப் போகிறது என்பதில் சந்தகமே இல்லை.

தொடக்கக் கல்வி தாய்மொழி வழியாகவே கொடுக்கப்பட வேண்டும் என்பதே உலக உளவியல் அறிஞர்கள் பலரின் ஒருமித்த கருத்து.

காந்தியடிகள் கூட கல்வி, உளவியல்படி, தாய்மொழியில் நல்ல அடித்தளம் அமைந்தால் தான், பிற மொழியறிவு கைகூடும் என்கிறார். முதல் வகுப்பு முதல் பள்ளி இறுதி வகுப்பு முடிய தாய்மொழியே பாடமொழியாகவும், பத்தாம் வகுப்பிற்குப் பிறகே பிற மொழியைக் கற்க வேண்டும் என்றே சொன்னார்.

முன்பொருமுறை வெளியான உச்ச நீதிமன்றத் திர்ப்பும், தொடக்கக் கல்வி அவரவர் தாய்மொழியிலேயே இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது. நிலைமை இப்படி இருக்க தாய்மொழி தமிழ்வழிக் கல்வியை அழித்துவிடுவது போன்று மெட்ரிகுலேஷன் அனுதாபிகள், கருத்துச் சொல்லி வருவது கண்டிக்கத்தக்கது தானே?

ஆங்கிலத்தைக் காதலிப்பவர்கள் இன்று நீதிமன்றங்களில் ஏறி, தமிழைச் சிறைக்குள் தள்ள கங்கணம் கட்டிக்கொண்டு செயல்படுகிறார்கள். அவர்களுக்கு சில அரசியல்வாதிகள், வக்கீலாக வாதாட முடிவெடுத்துச் செயல்படுவது தான் வேதனையிலும் வேதனை

# இந்தியாவை வளர்த்தெடுத்த கிறித்தவம்

ச. ஜெயராஜ்
உதவித் தொடக்கக்கல்வி அலுவலர் (ஓய்வு), சாலைக்கிராமம்

சமீப காலமாக கிறித்தவர்களுக்கு எதிரான தாக்குதல்கள், பாலியல் வன்கொடுமைகள், அடிக்கடி ஆங்காங்கே நடந்து வருகின்றன. புனித நாளான கிறித்து பிறப்பு நாளன்று சமூக விரோதிகள் ஆலயங்களில், வழிபாட்டு நேரத்தில் அத்துமீறி நுழைந்து கொடூரத் தாக்குதல் நடத்தி அங்குள்ள புனிதப் பொருள்களை உடைத்து, நொறுக்கி, நாசப்படுத்தி, ஆலயத் திருப்பீடத்தை சேதப்படுத்தி, திருப்பலி நிறைவேற்றிக் கொண்டிருந்த அருட்பணியாளரைத் தாக்கிய சம்பவம் உலகக் கிறித்தவர்களையே அதிர்ச்சியடையச் செய்திருக்கிறது. அதே நாளில் இந்திய நாட்டின் தலைமை அமைச்சர் டில்லியில் நடந்த கிறித்து பிறப்பு வழிபாட்டில் கலந்து கொண்டு "பாலுக்கும் காவல்; பூனைக்கும் நண்பன்" என்ற கபட நாடகமாடி, திராட்சை வேடமிட்டு தன்னுடைய இயல்பை, மத வெறியை, இந்துத்துவ பாசத்தைத் தோலுரித்துக் காட்டியுள்ளார்.

"உன் மீது நீ அன்பு கூர்வது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக" (மாற்கு 12:31) என்று கற்றுக் கொடுத்து, ஒவ்வொரு வழிபாட்டிலும் கூட நாட்டுத் தலைவர்களுக்காகவும், உலகத் தலைவர்களுக்காகவும் செபிக்க அழைப்பு விடுக்கும் கிறித்தவம் இந்த நாட்டுக்கு என்ன தீங்கு செய்தது?

"சவுலே, சவுலே, ஏன் என்னைத் துன்புறுத்துகிறாய்?" என்று திருத்தூதர் பணிகள் 9:4-ல் கூறுவது போல ஒவ்வொரு கிறித்தவனும் ஆட்சியாளர்களைப் பார்த்து "ஏன் எங்களைத் துன்புறுத்துகிறீர்கள்" என்று கேட்கும் காலம் வந்துவிட்டது.

கிறித்தவர்களின் வரலாற்றைத் திரும்பிப் பார்த்தால் இவர்களுக்கு விளங்கும். ஆதியிலே வார்த்தையாகி, வார்த்தை கடவுளாகி, கடவுள் மனிதனாகப் பிறந்தவர்கள்தான் கிறித்தவர்கள் என்பதை யாரறிவார்? விண்ணுக்கும் மண்ணுக்கும் அரசராம் கிறித்துவை தங்கள் தலைவராகப் பெற்றவர்கள்தான் கிறித்தவர்கள் என்பதை யாரறிவார்? உலக நாடுகளனைத்தையும் ஒரே குடையின் கீழ் அடிமைப்படுத்தி ஆட்சி செய்தவர்கள் கிறித்தவர்கள்தான் என்பதை யாரறிவார்? எங்கள் அதிகார ஆட்சி எல்லைக்குள் சூரியன் மறைவதேயில்லை என்பதை யாரறிவார்?

அதனால் தான் இந்தியாவில் 2.3 சதவீதம் உள்ள கிறித்தவர்கள் 72.5 சதவீதம் கல்வி நிறுவனங்களை நிறுவி ஏழைகளுக்கும், அனாதைகளுக்கும், கைவிடப்பட்டோருக்கும் உடல் ஊனமுற்றோருக்கும், கண்பார்வையற்றோருக்கும், காது கேளாதோருக்கும் இன்றளவும் கல்வியைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதை தேசியக் குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணைய (National Commission For Protection of Child Rights) தரவுகள் நமக்கு புள்ளி விபரமாகத் தருகிறது.

அதுமட்டுமா?... அனாதை இல்லங்கள், சிறார் இல்லங்கள், முதியோர் இல்லங்கள், ஊனமுற்றோருக்கான இல்லங்களை பல இடங்களில் இலவசமாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அது மட்டுமா?... தொழு நோயாளருக்கான மருத்துவமனை, புற்றுநோய்க்கான சிறப்பு மருத்துவமனை, பொதுநல மருத்துவமனை, குழந்தைகளுக்கான மருத்துவமனை போன்ற உயிர்காக்கும் மருத்துவமனைகளை இலவசமாகவும், மிக மிகக் குறைந்த கட்டணத்திலும் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அது மட்டுமா?... தீண்டாமைக் கொடுமைகள் தீப்பற்றி எரிந்து கொண்டிருந்த காலத்திலும், சாதி வெறி, சாக்கடையாய் நாற்றமெடுத்துக் கொண்டிருந்த காலத்திலும், பெண்ணடிமைத்தனம் கண்மூடித்தனமாகத் தலைவிரித்து ஆடிக் கொண்டிருந்த காலத்திலும், ஏட்டையும் பெண்கள் தொடுவது தீட்டு என்று எண்ணிக் கொண்டிருந்த காலத்திலும், பெண்களுக்கான கல்வியை, ஒடுக்கப்பட்டோருக்கான கல்வியை, தாழ்த்தப்பட்டோருக்கான கல்வியை, ஆதிக்க சக்திகளை எதிர்த்து அனைவருக்குமான பொதுப் பள்ளிகளை நிறுவி, "பள்ளித்தலமனைத்தும் கோயில் செய்வோம்" என்ற பாரதியின் வாக்கை வாழ்வாக்கிக் காட்டியது நீங்கள் துன்புறுத்தும் கிறித்தவம்தான்.

அது மட்டுமா...? கல்வி நிறுவனங்களை நிறுவி, அங்கு ஏழை மாணவர்கள் தங்கிப்படிக்க

வசதியாக விடுதிகள் ஏற்படுத்தி இலவச உணவு அளித்து கல்வியை வளர்த்தவர்கள் நீங்கள் துன்புறுத்தும் கிறித்தவர்கள்தான்.

அதுமட்டுமா?... இந்த 2.3 சதவீத மக்கள்தான் நாட்டிலுள்ள 74 சதவீத பிற மக்களுக்குக் கல்வி கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது, மறக்கவும் கூடாது; அதுதான் கிறித்தவம். கடுகு சிறிதென்று எண்ணிவிடாதீர்கள்; காரம் போகாதது. ஆலமரத்தின் விதை சிறிதென்று எண்ணிவிடாதீர்கள்; அதன் விழுதுகள் நிலத்தில் வேரூன்றி ஆயிரக்கணக்கான மக்களுக்கு நிழல் தருகிறது. அதுபோலத்தான் கிறித்தவர்களும் எண்ணிக்கையில் சிறுபான்மையினரென்று எண்ணிவிடாதீர்கள்; எண்ணங்களில் எவரெஸ்ட் சிகரம் போன்றவர்கள்.

அதுமட்டுமா?... "நோயுற்றிருந்தேன் என்னைக் கவனித்துக் கொண்டீர்கள். சிறையிலிருந்தேன் என்னைத் தேடி வந்தீர்கள்" (மத் 25:36) என்ற விவிலியத்தின் வாக்கை வேத வாக்காகக் கொண்டு மருத்துவமனைகளுக்குச் சென்று நோயாளிகளைச் சந்தித்து தேற்றி, ஆற்றுப்படுத்தி அவர்களுக்காகச் செபிக்கிறார்கள்.

அதுமட்டுமா?... சிறைத்துறை என்று நிறுவி குற்றவாளிகளை, அரசு கூண்டில் அடைக்கிறது. ஆனால் கிறித்தவமோ "சிறை ஊழியம்" (Jail Ministry) என்ற பணிக்குழுவை ஏற்படுத்தி சிறைச்சாலைகளுக்குச் சென்று, குற்றவாளிகளைச் சந்தித்து ஆறுதலையும், தேறுதலையும் வழங்கி வருகிறார்கள்.

அதுமட்டுமா?... அரசியல்வாதிகள், நாட்டை ஆள்வோர்கள், மாநில ஆட்சியாளர்கள் இவர்களில் 90 சதவீதத்தினர் கிறித்தவ நிறுவனங்களில் பயின்றவர்கள்தான். ஆனால் அவர்களோ தங்களை வளர்த்த நிறுவனங்களையே வலம் வந்து அழிக்க முற்படுகிறார்கள்.

மதமாற்றத் தடைச் சட்டம் ஏறக்குறைய பதினோரு மாநிலங்களில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. நாங்கள் ஏன் மற்றவர்களை மதம் மாற்ற வேண்டும். அந்த அளவிற்கு நாங்கள் மதம் பிடித்து அலையவில்லை. 200 ஆண்டு காலம் ஆட்சி செய்த ஆங்கிலேயர்களே மதமாற்றத்தைப் பற்றிச் சிந்திக்கவில்லை; நாங்கள் ஏன் மதமாற்றம் செய்யப்போகிறோம்?

இந்தியாவிற்கு வந்த ஐரோப்பிய குருமார்கள் கூட கட்டாய மதமாற்றம் செய்யவில்லை. தங்களுக்கு என்னென்ன வேண்டும் என்று சிந்தித்த தலைவர்கள் வாழ்ந்த காலத்திலும் இந்திய மக்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று சிந்தித்துச் செயல்பட்டார்கள். ஜான் பென்னி குயிக் போன்றோர்கள் தன் சொந்த நாட்டிலுள்ள தங்களுக்கான சொத்துக்களை விற்று இந்தியா கொண்டுவந்து அனைத்துத் தரப்பு மக்களுக்கும் தொண்டு செய்தார்கள்; பென்னி குயிக் முல்லை பெரியார் அணையைக் கட்டினார். ஒரு கிறித்தவர் கட்டிய அணையின் தண்ணீர் மதம் பார்க்கவில்லை. எங்கெங்கு கல்வி நிறுவனங்கள் தேவையோ அங்கெல்லாம் நிறுவி சாமானியர்களுக்கும் கல்வி கொடுத்தார்கள்.

அன்னை தெரசா தனக்கென வாழாமல் இந்திய மக்களுக்காகவே வாழ்ந்தவர். தொழுநோயாளருக்கான மருத்துவமனை நிறுவி தொழுநோய்ப் புண்களை சுத்தம் செய்யும் பொழுதும், சாலையோரச் சாக்கடையில் அழுகிக் கிடந்தவர்களை அரவணைக்கும் பொழுதும் மதம் சார்ந்து பணியாற்றவில்லை. இந்தியாவுக்கும், எல்லோருக்குமான தாயாய் விளங்கினார். அதனால்தான் அன்னை தெரசா புனித அன்னை தெரசாவாக மாறினார்.

கிறித்தவம் இந்தியாவில் கால் பதிக்கவில்லையென்றால் இந்தியாவின் வளர்ச்சி கேள்விக்குறியாகவே இருந்திருக்கும்.

கிறித்தவம் கட்டியெழுப்பிய கட்டிடங்கள்தான் இந்தியாவின் அடையாளச் சின்னங்களாகத் திகழ்கிறது. இந்தியாவின் கட்டிடக் கலை, சிற்பக்கலை, தொடர்வண்டி நிலையங்கள், விமான சேவைகள் அனைத்தும் கிறித்தவத்தின் அடையாளங்கள். எல்லாவற்றிற்கும் மேலாகக் கிறித்தவம் வளர்த்தெடுத்த கல்வி, கலை, கலாச்சாரம் போன்றவைகளால்தான் இந்தியா இன்று தலை நிமிர்ந்து நிற்கிறது. கிறித்தவர்கள் எண்ணிக்கையில் சிறுபான்மையினரானாலும் எண்ணங்களில், வாழ்க்கை வண்ணங்களில் நாங்கள் உயர்ந்தவர்கள் என்பதை மறந்துவிடாதீர்கள்.

கடந்த கால வரலாற்றை திரும்பப் பார்த்து, தற்கால நிலையோடு ஒப்பிட்டு எதிர்காலத்தில் ஒன்றுபட்ட இந்தியாவைக் காணப் பாடுபடுவோம்.

# "அன்பே உங்கள் வாழ்வுக்கு ஆணிவேரும் அடித்தளமுமாய் அமைவதாக"

(எபேசியர் 4:17)

✍ அருட்பணி. **செ. லூர்து ராஜ்**
பங்குத்தந்தை, திரு இருதயங்களின் ஆலயம், சருகணி

**முன்னுரை**

"அடித்தளம்" என்றால் ஒரு கட்டிடத்தை தாங்கும் உறுதி "ஆணிவேர்" என்றால் ஒரு மரத்தை நிலைத்திருக்கச் செய்யும் ஆழ்ந்த பிடிப்பு. புனித பவுல் கூறுவது + நம் வாழ்வில் சோதனையால் குலுங்கும் போது + உறவுகளைக் காயப்படுத்தும் போது +வயது, உடல் சூழ்நிலை மாறும் போது.

"நம்மை நிலை நிறுத்துவது அன்பே" அன்பு அடித்தளமாக இருந்தால் உறவுகள் சிதையாது. சேவைகள் சோர்வாக மாறாது. தியாகம் பாரமாகத் தோன்றாது, ஏனெனில் அந்த அன்பு மனித அன்பு மட்டும் அல்ல. கிறிஸ்துவின் அன்பு.

**அன்பு ஆணிவேராக இருந்தால்**

எதிர்ப்புகள் வந்தாலும் நம்மை வேரோடு பிடித்திருக்கும் அன்பு நம்மை உலரச்செய்யாது. அன்பு நம்மை வீழ்த்தாது. ஆணிவேர் ஆழமாக இருந்தால் மரம் அமைதியாகப் புயலை தாங்கும் போல + அன்பில் வேரூன்றிய வாழ்க்கை மௌனமாக சோதனைகளை ஜெயிக்கும்.

**ஆன்மீக செய்தி**

இந்த வசனம் நம்மை ஆழமான அன்பு கொள்ள அழைக்கிறது. அன்பு இருந்தால் நம்பிக்கை உயிருடன் இருக்கும். சேவை சுவையாக இருக்கும். வாழ்க்கை அர்த்தமுள்ளதாக்கும்.

அன்பே வாழ்வின் அடித்தளமும் ஆணிவேருமாக இருக்கட்டும். அப்பொழுது நம் வாழ்க்கை மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக மாறும்.

**1. உண்மையான அன்பு என்பது என்ன?**

உண்மையான அன்பு என்பது எதிர்பார்ப்பு இல்லாமல், சுயநலமின்றி, மற்றவரின் நன்மையை முதன்மையாகக் கருதும் ஒரு தூய மனநிலை ஆகும்.

❖ எதிர்ப்பார்ப்பில்லாத தன்மை ❖ தியாக மனப்பான்மை, ❖ பொறுமையும், மன்னிப்பும் ❖ நிலையான சூழ்நிலை மாறினாலும் அன்பு மாறாநிலை மரியாதையும் மதிப்பும் ❖ சொல்லில் அல்ல. செயலில் உண்மையான அன்பு என்பது"நீ மகிழ்வாய்" என்றால் அதுவே எனக்கு மகிழ்ச்சி என்று சொல்லும் அமைதியான ஆழமான உணர்வு.

**ஆன்மீக நோக்கில்:**

உண்மையான அன்பு என்பதே கடவுளின் இயல்பு. அதுமனிதனால் உருவாக்கப்படுவது அல்ல. இறையருளால் உள்ளத்தில் பிறக்கும் ஒளி.

**1. அன்பு**

ஆன்மீகமான அன்பு என்பதே கடவுளின் வெளிப்பாடு. அன்பு உள்ள இடத்தில் பயம் இல்லை, பகை இல்லை.

**2. நிபந்தனை இல்லாத அன்பு**

நல்லவரையும், தவறிழைப்போரையும் ஒரே கண்கொண்டு பார்க்கும் இறை அன்பே உண்மையான இறை அன்பு.

**3. சேவையாக மாறும் அன்பு**

ஆன்மீக அன்பு வார்த்தையில் நின்றுவிடாது. பசித்தவனுக்கு உணவு, துன்புறுவோருக்கு துணை, தளர்ந்தவர்களுக்கு ஆறுதல் இதுவே இறை அன்பின் செயல் வடிவம்.

**4. மன்னிப்பே அதன் உச்சம்**

காயப்படுத்தினவரையும் மன்னிக்கும் மனம் மனித அன்பல்ல. அது இறையன்பின் உச்சநிலை.

**5. உள்ளத்தில் எழும் அமைதி**

உண்மையான அன்பு உள்ளவன் வெளியில் எதை இழந்தாலும் உள்ளத்தில் அமைதியை இழக்கான். ஏனெனில் அவன் கடவுளுடன் ஒன்றாயிருப்பான்.

**ஆன்மீக முத்திரை**

என்னை நேசிப்பதல்ல உண்மையான அன்பு; என்னுள் உள்ள இறையொளியை மற்றவரிலும் காண்பதே உண்மை அன்பு.

**II. எத்தனை விதமான அன்பு நிலைகள் உள்ளன?**

ஆன்மீக நோக்கில் "அன்பு" என்பது ஒரே உணர்வு அல்ல; அது வளர்ந்து உயரும் பலநிலைகளைக் கொண்டது. 7 அன்பு நிலைகள்

**1. சுய அன்பு** (Self Love):-

"கடவுள் தந்த வாழ்க்கையை மதிப்பது நானும் இறைவன் படைப்பே" என்ற உணர்வு. இது அன்பின் அடித்தளம்.

**2. இயற்கை அன்பு (Natural Instinctive Love)**

குழந்தை-தாய், குடும்பம் -உறவு; இயல்பாக உண்டாகும் அன்பு. இது பிறவியோடு வரும் அன்பு.

**3. உணர்ச்சி அன்பு (Emotional Love)**

நட்பு, ஈர்ப்பு, பாசம், காதல், மனதைத் தொடும் அன்பு இது மகிழ்ச்சியும், வேதனையும் கலந்த அன்பு.

**4. பொறுமை அன்பு (Enduring Loves)**

ஏமாற்றம், சோதனை வந்தாலும் விலகாத அன்பு. இங்கே அன்பு முதிர்ச்சி அடைகிறது.

**5. தியாக அன்பு (Sacrificial Love)**

தன் நலத்தை விட்டு மற்றவரின் நன்மையைத் தேர்வு செய்தல் "நான்" குறைந்து "நாம்" பெருகும் நிலை

**6. மன்னிக்கும் அன்பு (Forgiving Love)**

காயப்படுத்தினவரையும் மன்னிக்கும் மனநிலை. மனித அன்பைத் தாண்டி இறை அன்பைத் தொடும் நிலை.

**7. தெய்வீக அன்பு (Divine / Agape Love)**

எல்லோரையும் ஒரே பார்வையில் காணும் அன்பு. நண்பன்-எதிரி என்ற வேறுபாடின்றி அனைவரிலும் கடவுளைக் காணும் நிலை இதுவே அன்பின் உச்சம்.

**விவிலிய அடிப்படையில்**

**1. சுயத்தை மதிக்கும் அன்பு Self-Worth in God.**

உன்மீது நீ அன்பு கூர்வது போல (மத்: 22:39) தன்னை மதிக்காதவன் பிறரையும் முழுமையாய் நேசிக்க முடியாது.

**2. குடும்ப & இயற்கை அன்பு** (Philla/ Storge)

பெற்றோர் - பிள்ளை - உறவுகளின் பாசம். "பால் குடிக்கும் தன் மகவைத் தாய் மறப்பாளோ? நான் உன்னை மறக்கவே மாட்டேன்" (எசாயா 49:15)

**3. நட்பு & மனித அன்பு** (Philia)

நண்பர்களுக்கிடையிலான விசுவாசமான அன்பு "நண்பன் எப்போதும் அன்பு காட்டுவான் (நீதிமொழி 17:17)

**4.பொறுமை கொண்ட அன்பு** (Patent Loves)

பலவீனங்களையும் தாங்கும். அன்பு பொறுமையுள்ளது. (1கொரிந்தியர் 13:43)

**5. தியாக அன்பு** (Sacrificial Love)

தன் உயிரையே அர்ப்பணிக்கும் அன்பு. தம் நண்பர்களுக்காக உயிரைக்கொடுப்பதைவிட (யோவான் 15:13) இயேசு கிறிஸ்துவின் சிலுவை அன்பின் உச்ச சாட்சி.

**6. மன்னிக்கும் அன்பு** (Forgiving Love)

துன்புறுத்தினவரையும் நேசிக்கும் நிலை. உங்கள் பகைவரிடம் அன்பு கூறுங்கள். (மத்தேயு 5:45)

**7. தெய்வீக அன்பு-கடவுளின் நிறைவு** (DIVINE LOVE)

அன்பே கடவுளின் இயல்பு "கடவுள் அன்பாய் இருக்கிறார்", (1யோவான் 4:8) இந்த நிலையில் அன்பு தன் உணர்வில்லை. இறைவனோடு ஒன்றாகும் வாழ்க்கை.

**III. இன்றைய இளைஞர்களுக்கு நாம் சொல்ல வேண்டிய பதில் என்ன?**

எது அன்பு ? எது அன்பல்ல?

**1 ஈர்ப்பே அன்பு அல்ல**

இன்று பலர் a) கவனம் கிடைப்பதை b) உடல் ஈர்ப்பை C) தொடர்ந்து மெசேஜ் வரும் உணர்வை அன்பென்று நினைக்கிறார்கள். ஈர்ப்பு வேகமாக வரும், அன்பு மெதுவாக வளர்ந்து வரும் நிலைக்கும். அன்பு ஒருபோகும் அழியாது (1கொரி 13:85)

**2.சுதந்திரத்தை பறிப்பது அன்பல்ல**

"என்னை நேசித்தால் இப்படிச் செய்", "என்னுடன் இல்லாவிட்டால் நீ அன்பில்லாதவன்" இவை கட்டுப்பாடு, அன்பல்ல. உண்மையான அன்பு மனிதனைச் சிறைக்குள் அடைக்காது. அவள் சிறக்க உதவும். "அன்பு அடுத்திருப்பவருக்கு தீங்கிழைக்காது" (ரோமை 13:10)

**3 பயன்பாடு அன்பல்ல**

தமக்கு தேவையிருக்கும் போது மட்டும் நெருங்கி வருபவர்கள், அன்பு காட்டவில்லை. பயன்படுத்துகிறார்கள். "அன்பு ஏற்றுக்கொள்ள அல்ல. கொடுக்கச் சுற்றுத்தரும்". "பெற்றுக் கொள்வதைவிட கொடுத்தலே பேறுடைமை". (தி. துப 20:35)

**4 வலியுடன் வரும் உறவு அன்பல்ல**

அழவைத்தால், மதிப்பைக் குறைத்தால், பயம் உண்டாக்கினால் அது அன்பல்ல. "உண்மை அன்பு மனதை குணப்படுத்தும், உடைப்பதில்லை."அன்பு பொறுமையுள்ளது (1 கொரிந்தியர் 13:41)

**5. உண்மையான அன்பு பொறுப்பை கற்றுத்தருவது:**

"இன்றைய இளைஞர்கள் ஃபீலிங் ஐ அன்பென்று நினைக்கிறார்கள். உணர்வு மாறலாம். ஆனால் பொறுப்பு இருந்தால் அன்பு நிலைக்கும்

"நம்பிக்கை வாக்கு பிறழாதவர் என்பர். ஆனால் நம்பி...கண்டு". (நீதி20:26)

**6. அன்பு கடவுளை அருகில் கொண்டு வரும்**

1. உன்னை – கடவுளிடமிருந்து விலக்கினால் 2) ஜெபத்தைக் குறைத்தால் 3.மனசாட்சியை மங்கச்செய்தால் அதை அன்பென்று ஏற்காதே.

"கடவுளிடமிருந்து வராதது அன்பல்ல" (1 யோ 4:7-8)

**இளைஞர்களுக்கான ஒரு தெளிவான அறிவுரை**

உன்னை உயர்த்தாத உறவு அன்பல்ல. உன் எதிர்காலத்தை காக்காத பாசம் அன்பல்ல. உன்னைக் கடவுளுக்கு அருகில் கொண்டு செல்லாத உணர்வு உண்மையான அன்பல்ல.

**ஆசிர்வாத வசனம்**

உன் வழியை ஆண்டவரிடம் ஒப்புவி.. அவரே உன் சார்பில் செய்வாற்றுவார் (திருப்பாடல் 37:53)

**IV. உண்மையான அன்பை சமூகத்திற்கு விதைப்பது எப்படி?**

உண்மையான அன்பு விதை போலத்தான் அமைதியாக விதைக்கவும்.

**1. நம்மிலிருந்து தொடங்குதல்**

அன்பு பேசும் வார்த்தையில் அல்ல நடத்தையில் தெரிகிறது. பொறுமை, மரியாதை, நேர்மை இவை அன்பின் முதல் விதைகள்.

**2. பாரபட்சமற்ற பார்வை**

ஏழை, பணக்காரன், சாதி, மதம், கல்வி, அறிவு, எல்லாவற்றுக்கும் அப்பால் மனிதனை மனிதனாகப் பார்க்கும் போது அன்பு வளர்கிறது.

**3. கேட்பது**

பெரிய சேவை. பலர் ஆலோசனை வேண்டாம். யாராவது கவனமாகக் கேட்கவேண்டும் என்பதே அவர்களின் தாகம். கேட்பது அன்பின் வெளிப்பாடு.

**4. சிறிய உதவிகள்**

பெரிய மாற்றம் 1) ஒரு புன்னகை 2) ஒரு ஆறுதல் வார்த்தை 3.) ஒருகைத்தாங்கல் இதெல்லாம் சமூக அன்பின் வலிமையான விதைகள்.

**5. மன்னிக்கும் மனம்**

பழி வாங்குதல் பிளவை உண்டாக்கும். மன்னிப்பு சமூகத்தில் அன்பை வேருன்றச் செய்கிறது.

**6. வலியுடன் நிற்பவர்களோடு நிற்பது**

உதவி செய்வது மட்டும் அல்ல. அவர்களின் வலியை நம்முடையதாக உணர்வது. உண்மையான அன்பின் சாட்சி.

**7. எதிர்ப்பார்ப்பு இல்லாத சேவை**

நன்றி எதிர்ப்பார்க்காமல் பெயர் தேடாமல் செய்யப்படும் சேவை அன்பின் மிகத்தூய வடிவம்.

**முடிவாக:-** உண்மையான அன்பு பெரியமேடைகளில் அல்ல. அன்றாட வாழ்க்கையின் சிறிய தருணங்களில் விதைக்கப்படுகிறது.

**நாம் ஒருவருக்கொருவர் அன்பாக இருத்தலே சமூகம். இது மெய்யாக மெதுவாக மனிதமயமாகும். நாம் கடவுளின் இயல்பை உலகில் வெளிப்படுத்துகிறோம்.**

**V. முதியோருக்கு நாம் காட்டும் அன்பு என்ன?**

**1. மரியாதையாக நடத்துதல்**

அவர்கள் பலவீனமாக இருக்கலாம், ஆனால் மதிப்பிழந்தவர்கள் அல்ல. "நரை திரண்டவர் முன் எழுந்து நில். முதிர்ந்தவர் முகத்தை மதித்து நட". (லேவியர் 19:32) மரியாதை என்பது முதியவருக்குக் காட்டும் அன்பின் முதல் அடையாளம்.

**2. கவனமாகக் கேட்பது**

அவர்களின் கதைகள் வெறும் நினைவுகள் அல்ல. அனுபவத்தின் ஆசீர்வாதம். ‘‘கேட்டு அறிவில் இன்னும் தேர்ச்சியடைவர்’’ (நீதிமாழி 1:5).

**3. கைவிடாமல் அருகில் நிற்பது**

உடல் வலுவிழந்து இருக்கும்போது உறவுகளே அவர்களின் பலம். "நான் ஒருபோதும் உன்னைக் கைவிடமாட்டேன் உன்னை விட்டு விலகமாட்டேன் " (எபிரேயர் 13:5).

**4. பொறுமை காட்டுதல்**

மறதி, மெதுவான நடை, மீண்டும் மீண்டும் சொல்லுதல் இவையெல்லாம் பொறுமை பயிற்சி (கொரி13:14) "பொறுமை இல்லாத அன்பு முதியவரைக் காயப்படுத்தும்".

**5. தேவைகளைக் கவனித்தல்**

உணவு, மருந்து, சுகாதாரம் மட்டும் அல்ல மன அன்பும் ஒரு தேவையே. "ஒருவர் மற்றவருடைய சுமைகளைத் தாங்கிக் கொள்ளுங்கள்" (கலாத் 6:2)

**6. கௌரவத்துடன் பராமரித்தல்**

"அவர்களை சுமையாக அல்ல. ஆசிர்வாதமாகப் பார்ப்பது". "நரை முடி மதிப்பிற்குரிய மணிமுடி".

(நீதிமொழிகள் 16:31)

**7. ஜெபத்திலும் நினைவில் வைத்தல்**

அவர்களுக்காக ஜெபிப்பது, அவர்களோடு கடவுள் நிற்கிறார் என்று உங்களை நினைவுகூரும் பொழுதெல்லாம் என் கடவுளுக்கு நன்றி கூறுகிறேன்." (பிலிப்பியர் 1:3)

**முடிவு சிந்தனை**

முதியவருக்கு நாம் காட்டும் அன்பு ஒரு கடமை அன்று. அது ஒரு ஆன்மீக ஆசீர்வாதம். அவர்கள் மடியில் நாம். கற்றுக் கொள்ளுவது புத்தகம் சொல்லாத வாழ்க்கை. ஞானம் உன் தந்தையையும், உன் தாயையும் மதித்து நட". (விப 20:12)

**VI. சமூகத்திலும் குடும்பத்திலும் முதியோர்களுக்கு நாம் வழங்குவது என்ன?**

**1. பராமரிப்பா..?... அல்லது புறக்கணிப்பா?**

உணவு, உடை, மருந்து இவை வழங்கப்படலாம். ஆனால் அன்பான வார்த்தை, நேரம் வழங்கப்படுகிறதா?

"வாரி வழங்கினாலும் ஒருவரிடம் அன்பு இல்லையேல் பயன் ஒன்றுமில்லை" (1கொரிந்தியர் 13:3)

**2. இடமா அல்லது ஒதுக்கமா?**

வீட்டில் ஒரு மூலையா அல்லது மனத்தில் ஒரு இடமா? "முதிர் வயதில் என்னைத் தள்ளிவிடாதேயும்" (திபா71:9). இந்த ஜெபம் இன்றும் பல முதியோரின் மௌன அழுகை.

**3. ஆலோசனையா?... அல்லது அலட்சியமா ...**

ஒரு காலத்தில் குடும்பத்தின் வழிகாட்டிகள். அவர்கள் இன்று "பழைய காலக்கதை" என்று ஒதுக்குகிறார்களா?

மூப்போரிடம் ஞானமுண்டு, ஆயுள் நீண்டோரிடம் அறிவு உண்டு (யோபு 12:12)

**4. பாதுகாப்பா அல்லது பயமா?**

முதியோர் பயமில்லாமல் வாழ்கிறார்களா? அல்லது சுமை என்ற உணர்வில் திணறுகிறார்களா?

" திக்கற்ற பிள்ளைகளுக்கு தந்தையாக-- காப்பாளராக இருப்பவர் தூயகத்தில் உறையும் கடவுள் " (திபா 68:5)

**5. கௌரவமா அல்லது அவமானமா?**

உதவி செய்கிறோமா? ஆம் ஆனால் கௌரவத்துடன் செய்கிறோமா? "எல்லாருக்கும் மதிப்புக் கொடுங்கள் (1பேதுரு2:17)

**6. குடும்பத்தில் பங்கா... அல்லது பாரமா**

தீர்மானங்களில் அவர்களுக்கு இடம் உண்டா? அல்லது அவர்கள் வெறும் பாரமா? "நல்ல அறிவுரைக் கேட்டுத் திட்டமிட்டால் வெற்றிபெறுவாய்" (நீமொ20:18)

**சுயவினா (நம்மிடம் நாமே கேட்கவேண்டிய கேள்விகள்)**

- ✦ பேச நேரம் ஒதுக்குகிறோமா?
- ✦ அவர்களின் கண்ணீரைக் கவனிக்கிறோமா?
- ✦ அவர்கள் வாழும் காலம் மதிப்புடன் இருக்க உதவுகிறோமா?

**முடிவு சிந்தனை**

முதியோருக்கு நாம் வழங்கவேண்டியது உணவு மட்டும் அல்ல. மரியாதை, நேரம், அன்பு, பாதுகாப்பு. "அவர்கள் முதிர்வயதிலும் கனிதருவர்" (திபா 92:14)

**முதியோரை எப்படி நடத்துகிறோமோ அதுவே நமது சமூகத்தின் ஆன்மீக நிலை.**

**முடிவுரை**

உண்மையான அன்பு என்பது வார்த்தைகளால் அலங்கரிக்கப் படும் ஒன்றல்ல; வாழ்க்கையால் சாட்சி சொல்லப்படும் ஆன்மீக வாழ்வு. அந்த அன்பு குடும்பத்தில் விதைக்கப்படும் போது மரியாதை மலர்கிறது. சமூகத்தில் விதைக்கப்படும்போது மனிதநேயம் வளர்கிறது. முதியவரிடம் வெளிப்படும்போது தேவனின் இருதயம் தொட்டுச் சிரிக்கிறது.

"அன்பே நம் வாழ்வின் அடித்தளமும் ஆணிவேருமாக"(எபேசியர் 3:17) அமைந்தால் சோதனைகள் நம்மைக் குலைக்க முடியாது. வலி நம்மை சேவை சோர்வாக மாறாது.

முதியவரை மதிக்கும் சமூகம் தன் எதிர்காலத்தைப் பாதுகாக்கிறது. பலவீனரை தாங்கும் குடும்பம் தன் ஆன்மீக உயரத்தை வெளிப்படுத்துகிறது. எனவே நாம் சொல்லும் நம்பிக்கை அன்பின் செயல்களால் நிரூபிப்போம் நாம் விதைக்கும் அன்பை கடவுள் தமது நேரத்தில் நம்பிக்கை, சமாதானம், ஆசிர்வாதமாக அறுவடை செய்யச் செய்வார்.

**"அன்பு ஒருபோதும் அழியாது". (1கொரி 13:8).**

இந்த அன்பில் நடக்கும் ஒவ்வொருவரும் இந்த உலகிற்கு உயிருள்ள

நற்செய்தியாக மாறுவாராக!

நாம் விதைக்கும் அன்பை கடவுள் ஆசிர்வாதமாக மாற்றுவார்.

நாம் எல்லோரும் உயிருள்ள **சாட்சிகளாக மாறுவோம்.**

# மனமாற்ற சாம்பலும், உயிர்தெழும் அருளும்

✍ மாரா

திருநீற்று புதன்கிழமை என்பது கிறிஸ்தவ திருச்சபையில் தவக்காலத்தின் (Lent) தொடக்க நாளாகும். இது இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை நினைவு கூரும் உயிர்ப்பு பெருவிழாவிற்கு முன் வரும் நாற்பது நாள் ஆரம்பமாகக் கருதப்படுகிறது. இந்த நாளில் விசுவாசிகளின் நெற்றியில் சாம்பல் இட்டு, "நீ மண்ணாக இருக்கிறாய் மண்ணுக்கே திரும்புவாய்" (தொடக்க நூல் 3:19) என்று சொல்லப்படுவது, மனித வாழ்வின் நிலையாமை, பாவ உண்மை மற்றும் இறைவன் இருளின் அவசியத்தை ஆழமாக நினைவூட்டுகிறது.

திருநீற்றுப் புதன் ஒரு வெளிப்புற சடங்காக மட்டும் இல்லாமல், மனிதனின் உள்ளார்ந்த மாற்றத்தையும், தாழ்மையையும், மனமாற்றத்தையும் அழைக்கும் ஒரு அழமான ஆன்மீக நிகழ்வாகும். இந்தக் கட்டுரை, திருநீற்று புதன்கிழமையின் விவிலிய அடிப்படைகள், சாம்பலின் குயிரீட்டு அர்த்தம், மனமாற்றத்தின் இறையியல், மற்றும் இன்றைய காலத்திற்கான முக்கியத்துவம் ஆகியவற்றை புதிய பார்வையுடன் ஆராய்கிறது.

**பழைய ஏற்பாட்டில் சாம்பலும் மனமாற்றமும்**

பழைய ஏற்பாட்டில் சாம்பல் என்பது துக்கம், தாழ்மை, மற்றும் மனமாற்றத்தின் முக்கிய அடையாளமாகும். துன்பத்திலும் பாவ உணர்விலும் மனிதன் தன்னை இறைவன் முன் தாழ்த்திக்கொள்ளும் போது, சாம்பலில் அமர்வது அல்லது சாம்பல் பூசிக்கொள்வது வழக்கமாக இருந்தது.

யோபு தனது வேதனையின் முடிவில் கூறுகிறார் "நான் என்னையே வெறுக்கிறேன் தூளிலும் சாம்பலிலும் மனமாறுகிறேன்" (யோபு 42:6) இங்கு யோபின் மனமாற்றம் ஒரு குறிப்பிட்ட பாவத்திற்கானதல்ல. மாறாக, இறைவனின் மகத்துவத்தை முழுமையாக புரிந்துகொள்ள முடியாத மனித வரம்பை உணர்ந்ததன் வெளிப்பாடாகும். ஆகவே சாம்பல், மனித அறிவின் எல்லைகளையும், தெய்வீக ஞானத்தின் முன் தாழ்மையையும் குறிக்கிறது.




நினிவே மக்களின் மனமாற்றம்

யோனா நூலில், நினிவே மக்கள் யோனாவின் எச்சரிக்கையை கேட்டவுடன், நோன்பிருந்தது சாக்குடை அணிந்து சாம்பலில் அமர்கிறார்கள் (யோனா 3:5-6) இது மனமாற்றம் என்பது தனிப்பட்ட அனுபவம் மட்டுமல்ல, சமூகத்தையும் உள்ளடக்கிய ஒரு செயல்முறை என்பதை காட்டுகிறது. திருநீற்று புதன் இதே பாரம்பரியத்தைத் தொடர்கிறது. மனிதன் தன் பாவத்தையும் நிலையாமையையும் வெளிப்படையாக ஒப்புக்கொள்வதன் மூலம், இறைவன் அருளின் மீது முழு நம்பிக்கையை வெளிப்படுத்துகிறான்.

**இறைவாக்கினர்களின் உள் மனமாற்ற அழைப்பு**

இதயத்தின் மனமாற்றத்தை திருநீற்று புதன்கிழமையில் வாசிக்கப்படும் முக்கிய விவிலியப் பகுதி யோவேல் இறைவாக்கினர் "உங்கள் உடைகளை அல்ல, உங்கள் இதயங்களையே கிழியுங்கள்" (யோவேல் 2:13). இந்த வசனம் வெளிப்புற சடங்குகளுக்கும் உள் மனநிலைக்கும் இடையிலான வேறுபாட்டை வலியுறுத்துகிறது. சாம்பல், நோன்பு போன்றவை தேவையற்றவை

அல்ல ஆனால் அவை உண்மையான மனமாற்றத்தை பிரதிபலிக்க வேண்டும். இன்றைய பார்வையில், திருநீற்று புதன்கிழமை உடல் – ஆன்மா ஒருமைப்பாட்டை வலியுறுத்துகிறது. மனமாற்றம் என்பது எண்ணங்களில் மட்டுமல்ல, உடலாலும் வாழ்வாலும் வெளிப்பட வேண்டியது.

**இறைவனின் இரக்கம் : மனமாற்றத்தின் அடித்தளம்**

யோவேல் மேலும் கூறுகிறார்: "உங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள். அவர் அருள் நிறைந்தவர், இரக்கம் மிக்கவர்" (யோவேல் 2:13). மனமாற்றம் பயத்தின் விளைவாக அல்ல இறைவனின் இரக்கத்தின் மீது கொண்ட நம்பிக்கையின் விளைவாகும். திருநீற்று புதன்கிழமை மனிதனை குற்ற உணர்வில் மூழ்கடிக்காமல், நம்பிக்கையின் பாதையில் நடத்துகிறது. புனித அகுஸ்தீன் (St. Augustine) இவ்வாறு கூறுகிறார்; "இறைவன் இயலாததை கட்டளையிடுவதில்லை. மாறாக, நாம் செய்யக்கூடியதை செய்யவும், செய்ய முடியாததை அவரிடம் கேட்கவும் அழைக்கிறார்."

**புதிய ஏற்பாட்டின் வெளிச்சத்தில் திருநீற்று புதன்கிழமை**

"நீங்கள் நோன்பிருக்கும் போது, முகத்தை சோகமாக்கிக் கொள்ளாதீர்கள்" (மத்தேயு 6:16) இயேசு தவத்தை மறுக்கவில்லை போலியான ஆன்மீகத்தைக் கண்டிக்கிறார். திருநீற்று புதன்கிழமை, பிறருக்குக் காட்டுவதற்கான பக்தியல்ல இறைவன் முன் உண்மையாக நிற்கும் மனநிலையாக இருக்க வேண்டும்.

**சாம்பலும் சிலுவையும்**

சாம்பல் மரணத்தை நினைவூட்டினாலும், அது சிலுவையின் அடையாளமாக இடப்படுகிறது. இது மரணம் இறுதியல்ல என்பதைக் கூறுகிறது. திருத்தூதர் பவுல் 2 கொரிந்தியர் 4:10 "இயேசுவின் மரணத்தை நமது உடலில் சுமக்கிறோம் அதனால் அவருடைய வாழ்க்கையும் வெளிப்பட வேண்டும்" என்பார். திருநீற்று புதன்கிழமை உயிர்ப்பு பெருவிழாவிற்குத் திசை காட்டும் ஆரம்பமாகும்.

பலவீனமும் மகத்துவமும் நிறைந்த "நீ மண்" என்ற வாசகம் மனிதனை இழிவுபடுத்துவதல்ல தன்னிறைவு என்ற மாயையிலிருந்து விடுவிப்பதாகும். கார்ல் பார்த் (Karl Barth) சொல்வார் "மனிதன் பலவீனமானவன் அந்த பலவீனத்திலேயே அவன் இறைவன் முன் நிற்கிறான்" மார்ட்டின் லூதர் கூறுகிறார் "இறைவன் ஒன்றுமில்லாததிலிருந்து உருவாக்குகிறார் ஆகவே மனிதன் ஒன்றுமில்லை என்பதை உணரும் வரை, இறைவன் அவனில் செயல்பட முடியாது" சாமபல் அந்த "ஒன்றுமில்லை" என்ற உணர்வை குறிக்கிறது.

இன்றைய காலத்திற்கான பொருத்தம்

மரணம் பற்றி பேசத் தயங்கும் இன்றைய சமூகத்தில், திருநீற்று புதன்கிழமை மனித வாழ்க்கையின் நிலையாமையை வெளிப்படையாக அறிவிக்கிறது. இது சுயநலமும் நுகர்வாதமும் நிறைந்த காலாச்சாரத்திற்கு எதிரான ஒரு ஆன்மீக சவாலாகும்.

மனிதன் மண்ணிலிருந்து உருவாக்கப்பட்டவன் என்பதால், புமியுடனான உறவையும் சீரமைக்க வேண்டிய பொறுப்பு உண்டு. முன்னாள் திருத்தந்தை பிரான்சிஸ் கூறுகூார் "நாம் பூமியின் துகள், ஆனால் அந்த பூமியே நமது பாவங்களால் காயமடைந்துள்ளது."

திருநீற்று புதன்கிழமை மனிதனை தாழ்மையிலும் உண்மையிலும் நிறுத்துகிறது. இது பாவத்தை மறைக்கவில்லை. அதே நேரத்தில் நம்பிக்கையையும் இழக்கச் செய்யவில்லை. சாம்பல் மனிதனின் முடிவை நினைவூட்டினாலும், அது இறைவனின் அருளால் வரும் புதிய வாழ்க்கையின் தொடக்கமாக அமைகிறது. திருநீற்று புதன்கிழமை, மனிதன் தன்னைத் தானே அறிந்து, இறைவனை மீண்டும் நோக்கி திரும்பும் ஒரு ஆன்மீக அழைப்பாக நிற்கிறது. இது மரணத்திற்கான அடையாளம் அல்ல உயிர்த்தெழுதலுக்கான பாதையின் முதல் படியாகும்.

# சாம்பல் பூசிக்கொண்டாயா?

✍ திருமதி. **ஜாக்குலின் பிரிட்டோ,** சிவகங்கை

"ஆண்டவரைக் காண்பதற்கு வாய்ப்புள்ளபோதே அவரைத் தேடுங்கள்" (எசா 55:6) நெற்றியில் சாம்பல் பூசிக்கொண்ட திருநீற்றுப் புதன் அன்று,

- ❖ பாவங்களை விட்ட விலகவும்,
- ❖ அநீதியைவிட்டு விலகிச் செல்லவும்,
- ❖ அந்நியருக்குச் செயல்களை அடியோடு செலுத்திடவும்,
- ❖ குற்றங்களை குறைத்து ஆண்டவரிடம் திரும்ப வரவும், அழைப்பு விடுக்கிறார். நம் ஆண்டவர் மனந்திரும்புவோருக்கு அவர் அளிக்கும் மன்னிப்பு எத்துனை மேலானது என்பதை நினைவூட்டுகிறது.
- ❖ ஊரிலே சமையல் முடிந்தவுடன், அடுப்புத் தீயை தீர்க்கச் செய்து, கிடைத்த சாம்பலை பல் துலக்கவும், பாத்திரம் கழுவவும், செடிகளுக்கு பூச்சிக் கொல்லியாகவும், பயன்படுத்துவதைப் பார்த்திருக்கிறோம்!

**விவிலியத்திலே...**

ஆண்டவரின் இரக்கத்தையும் பெறவும், தங்கள் பாவங்களிலிருந்து மன்னிப்புப் பெறவும், தங்கள் மன்றாட்டு கேட்கப் பெறவும், சாக்கு உடை அணிந்து, தங்கள் மேல் சாம்பலைத் தூல்க் கொண்டு, நோன்பு இருந்ததாக, விவிலியத்தில் வாசிக்கின்றோம்.

**யோனா நூலிருந்து...**

"அவர்கள் செய்யும் தீமைகள் என் முன்னே வந்து குவிகின்றன" (யோனா 1:2) என ஆண்டவர் உரைத்து, நினிவே நகர மக்களிடம் யோனா அனுப்பப்பட்டார்.

நினிவே நகர அரசன் இதைக் கேட்டு, சாக்கு உடை அணிந்து, சாம்பல் மீது அமர்ந்து கொண்டு, தன் நாட்டு மக்களை, கடவுளை நோக்கி மன்றாடவும், ஆண்டவரின் இரக்கத்தைப் பெற நோன்பிருக்கவும் அழைப்பு விடுத்ததை, யோனாப் புத்தகத்திலே பார்க்கின்றோம்! மக்கள் தீய வழிகளினின்று விலகியதைக் கண்டு, ஆண்டவரும் மனமிரங்கியதைப் பார்க்கின்றோம்!



**யூதித்து நூலிலிருந்து...**

எருசலேமில் வாழ்ந்து வந்த இஸ்யேல் ஆண்கள் பெண்கள், குழந்தைகள் ஆகிய அனைவரும் தரையில் சாம்பலைத் தூக்கிக் கொண்டு, சாக்கை விரித்து, கோயிலின் முகப்பில் ஆண்டவர் திருமுன் முகம் குப்புற விழுந்து நோன்பு இருந்ததாக வாசிக்கின்றோம்!

"ஆண்டவர் அவர்களது குரலுக்கு செவிசாய்த்தார்; யூதேயா முழுவதிலும் எருசலேமில் எல்லாம் வல்ல ஆண்டவரது கோவில் முன்னிலையிலும் மக்கள் பலநாள் நோன்பிருந்தார்கள்" (யூதித்து 4:13)

இவ்வாறாக, தங்களை ஆண்டவர் முன் தாழ்த்திக் கொண்டு, தங்கள் வேண்டுதல் நிறைவேற, சாம்பலைத் தூலக் கொண்டதாக வாசிக்கின்றோம்!

# ஆய்வும் சுயஆய்வும் – தொடர்

✍ அருள்பணி. ஜெ. மரிய அந்தோணி
வியான்னி அருள்பணி மையம், சிவகங்கை



## 72. கடின உழைப்பு

**ஆய்வு:**

கடின உழைப்புக்கு ஈடு இணை ஏதுமில்லை என்பது நாம் அறிந்ததே! வாழ்வில் முன்னேறுபவர்களிடம் அதிகமாக புத்திசாலித்தனம் இருக்கிறது என்று கூறுவதைவிட, அதிகமாக்க கடினஉழைப்பு இருக்கிறது என்று சொல்வதே சரியானதாக இருக்கும். கடினஉழைப்பு இருக்கும் இடத்தில் புத்திசாலித்தனம் கூடுவதற்கான வாய்ப்பு உண்டு. ஆனால் புத்திசாலித்தனம் உள்ள இடத்தில் கடின உழைப்பு இருக்கும் என்று சொல்லிவிட முடியாது. கடின உழைப்பைப் பற்றிய இரு ஆய்வுகள் இதோ!

**ஆய்வு 1**

அமெரிக்காவின் பெரிய பணக்காரர்கள் குறித்து ஆய்வு ஒன்று நடத்தப்பட்டது. அவ்வாய்வின்படி, பணக்காரர்கள் பட்டியலில் இருந்தவர்களில் ஏறத்தாழ 80 சதவிகிதத்தினர் முதல்முறையாக பணக்காரர்கள் ஆனவர்கள் என்பது கண்டுபிடிக்கப்பட்டது. அதாவது 20 சதவிகித்திற்கு உட்பட்டவர்கள்தான் பணக்கார பெற்றோர்களைக் கொண்டிருந்தவர்கள். மற்ற அனைவரும் கடின உழைப்பின் மூலம் வசதியில் முதல்நிலையை அடைந்தவர்கள்தான். இவ்வாய்வின் மறுபக்கம் என்னவெனில், ஏறத்தாழ 80 சதவிகித பணக்கார பெற்றோர்களின் பிள்ளைகள் கடின உழைப்புக்குத் தயாராக இல்லாததன காரணமாக வசதி ஏணியில் கீழிறங்க ஆரம்பித்து விடுகின்றனர் என்பதுதான்.

**ஆய்வு 2:**

மற்றொரு ஆய்வின்படி, Family-Run Business என்று சொல்லப்படுகின்ற பரம்பரை குடும்ப வியாபாரம் பெரும்பாலும் மூன்றாவது தலைமுறையைத் தாண்டுவதில்லையாம். அதாவது ஒரு தந்தை தன் கடினஉழைப்பின் மூலம் ஆரம்பித்த தொழிலை தொடர்ந்து நிலைநிறுத்திக் கொள்வதற்கான உழைப்பும் திறமையும் அடுத்தடுத்து வரும் தலைமுறைகளுக்கு இருப்பதில்லை.

**சுயஆய்வு:**

தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சிதன் மெய்வருத்த கூலி தரும்' (குறள் 619) என்றார் திருவள்ளுவர். "தங்களுக்குத் தாங்களே உதவி செய்யத் தயாராக இருப்பவர்களுக்குத்தான் கடவுளும் உதவி செய்யத் தயாராக இருக்கிறார்" (God Helps Those Who Help Themselves) என்கின்றது ஓர் ஆங்கிலேயப் பழமொழி. கடின உழைப்பு இல்லாமல் வாய்ச்சாலக்கதாலும், குறுக்கு வழிகளாலும் முன்னேறிவிடலாம் என்று எண்ணக்கூடிய மனநிலை இன்றைய சூழ்நிலையில் அதிகமாகவே இருந்து கொண்டிருக்கிறது. இது சமூகத்திற்கு ஆபத்தானது மட்டுமல்ல, அபாயகரமானதும் கூட!

# 73. மணம் வீசாதன திருமணம்

**ஆய்வு**

இந்தியாவில் உள்ள ஒருசில கல்லூரிகளில் அமெரிக்காவை சேர்ந்த ஒரு நிறுவனம் நடத்திய ஆய்வு இது.

கல்லூரியில் படித்த மாணவ, மாணவியர்களிடம் ''உங்களது வாழ்வில் திருமணம் ஒரு முக்கியமான அங்கமாக இருக்கப் போகிறது. நீங்கள் ஏன் திருமணம் செய்து கொள்ளப் போவதற்கான காரணம் என்ன?'' என்கின்ற கேள்வி கேட்கப்பட்டது. ஒருசிலர், ''பலரும் திருமணம் செய்து கொள்கின்றனர். எனவே நானும் செய்து கொள்ளப்போகிறேன்'' என்றனர். வேறு சிலர் ''வாழ்க்கைக்கென்று ஒரு துணை வேண்டும் அல்லவா! எனவேதான் திருமணம் செய்து கொள்ளப்போகிறேன்'' என்றனர். இன்னும் சிலர் ''வீட்டு வேலைகள் எல்லாம் செய்வதற்கு ஆள் தேவைப்படுகிறது'' என்றனர். இது போக, ''சமூகத்தில் வாழவேண்டுமெனில் இது ஒரு தவிர்க்க முடியாத நிலை (It is an unavoidable stage in life)'' என்று சொன்னவர்களும் உண்டு.

ஆய்வை நடத்திய ஆய்வுக்குழுவினர் திருமணத்தை பற்றிய ஒரு தெளிவான பார்வை பலரிடமும் இல்லை என்று தங்களது ஆய்வின் முடிவில் குறிப்பிடுகின்றனர்.

**சுயஆய்வு :**

ஒரு கடைக்குச் சென்றால் கூட, 'ஏன் நாம் அங்கு செல்லுகிறோம்?' என்கிற தெளிவு நம்மிடம் இருக்கிறது. ஒரு கல்லூரியில் ஒரு குறிப்பிட்ட பாடப்பிரிவை தேர்ந்தெடுக்கும் போது, ஏன் இந்தக் குறிப்பிட்ட பாடப்பிரிவைத் தேர்ந்தெடுக்கிறோம்?



என்கின்ற தெளிவு நம்மில் பலருக்கு இருக்கிறது. ஆனால் வாழ்வின் மாபெரும் அங்கமாகிய திருமண வாழ்வின் நோக்கம் குறித்து பலரிடம் தெளிவு இருப்பது இல்லை என்பது ஒரு கசப்பான உண்மை. அன்பைப் பகிர்ந்து வாழ்வின் அர்த்தத்தைம் மகிழ்வையும் ஆழமாக்கிக் கொள்ள வேண்டும் என்ற சரியான புரிதலோடு பலரும் திருமண வாழ்விற்குள் நுழைவதில்லை. இதன் காரணமாகவே திருமண வாழ்வில் சிறுசிறு சங்கடங்கள் ஏற்பட்டால்கூட திருமண வாழ்விற்கு வெளியே மகிழ்ச்சியைத் தேடும் அவலநிலை ஏற்படுகிறது. ஒரு மனிதரின் வாழ்வில் அன்பு இருந்தது என்றால் சில குறிப்பிட்ட வகை ஹார்மோன்கள் சுரக்கப்படுகின்றன என்றும், இந்த ஹார்மோன்கள் ஒரு மனிதரை நலமாகவும் இளமையாகவும் வைத்திருக்கின்றன என்றும் இன்னொரு ஆய்வு கூறுவது குறிப்பிடத்தக்கது.

# என்னைக் கொடுக்கிறேன், ஆண்டவரே

✍ அருள்பணி. **பிலோமன்,**
உதவிப்பங்குத்தந்தை, தேவகோட்டை

என்னைக் கொடுக்கிறேன், ஆண்டவரே
பொதுவாக நாம் இறைவனுக்குக்
காணிக்கையாகக் கொடுப்பது
பணமா?
நேரமா?
பொருளா?
ஆவணங்களா?
இவை அனைத்தும் நல்லவையே
ஆனால் அவை அனைத்தையும் தாண்டி,
தவக்காலம் நம்மிடம் கேட்கும்
மிக ஆழமான,
மிக நேரடியான கேள்வி ஒன்று உள்ளது;
"நீ உன்னை கொடுக்கிறாயா?"
இந்தக் கேள்வி நம்மை அசைக்கிறது
நம்முடைய ஆன்மிக முகமூடிகளை
ஒன்றொன்றாக அகற்றுகிறது.
ஏனெனில், இறைவன் நம்மிடமிருந்து
உலக சார்ந்த பொருட்களை எதிர்பார்ப்பதில்லை,
அவர் விலை உயர்ந்த பொருள்களைத்
தேடுவதில்லை..
அவர் எதிர்பார்ப்பது உண்மையான இதயத்தை
அதனால்தான் இயேசு தெளிவாகச் சொல்கிறார்
"நான் விரும்புவது பலி அல்ல, இரக்கம்"
(மத்தேயு 9:13)
பலிகள் வெளியில் தெரியும்.
இரக்கம் உள்ளத்தில் பிறக்கும்
பலிகள் சடங்காக முடிந்து விடலாம்.
இரக்கம் வாழ்வாக மாறுகிறது.
"என்னைக் கொடுக்கிறேன், ஆண்டவரே"
என்ற வார்த்தைகள் பெருமையின் குரல் அல்ல;
அது நம்மை உள்ளார்ந்து அறிந்த ஒருவருக்குக்
கொடுக்கப்படும் பணிவான ஒப்புதல்.
அதாவது, என் பலவீனங்களோடு,
என் காயங்களோடு,
என் பயங்களோடும்
நான் என்னையே உமக்கு ஒப்படைக்கிறேன்
என்பதன் வெளிப்பாடு.
நான் வலிமையானவன் என்று அல்ல;
நான் சரியானவன் என்று அல்ல;
நான் எல்லாவற்றையும் சரி செய்து விட்டேன்
என்று அல்ல.
"என்னிடம் இருக்கும் "நான்" என்ற என்னையே
உமக்கு கொடுக்கிறேன்"
என்பதே இந்த அர்ப்பணிப்பு
பலிபீடத்தின் முன் வைக்கப்படும்
அப்பமும் திராட்சை இரசமும் போல,
நம்முடைய வாழ்க்கையும்
முழுமையாகவும்
முறையாகவும்
இருக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை
அப்பம் உடைக்கப்படுகிறது.
திராட்சை நசுக்கப்படுகிறது
அவை கலக்கப்படுகின்றன
அப்போதுதான்
அவை அர்த்தம் பெறுகின்றன.
அதேபோல், நம்முடைய வாழ்க்கையும்
உடைந்த அனுபவங்களால்,
வலி நிறைந்த நினைவுகளால்,
கலக்கப்பட்ட உணர்வுகளால்
ஆகியிருக்கலாம்
அவற்றை மறைத்து,
அவற்றை ஒதுக்கி,
"நம்மை நாமே இறைவனுக்குக் கொடுக்க
முடியாது"
என்று நாம் நினைக்கிறோம்
ஆனால் இறைவன்
உடைந்ததை நிராகரிப்பதில்லை
அவர் முழுமையை அல்ல,
நம்மை அப்படியே ஏற்றுக் கொள்கிறார்
அதேயே அவர்
ஆசீர்வதித்து,
மாற்றி
பகிர்ந்து,
உயிர் தரும் காணிக்கையாக மாற்றுகிறார்
தவம் என்பது
எதையோ விட்டுவிடுவது அல்ல
உணவை மட்டும் குறைப்பதும் அல்ல.
வெறும் பழக்கங்களை மாற்றுவதும் அல்ல

"தவம் என்பது
என்னையே ஒப்படைப்பது"
என் அகந்தையை,
என் கட்டுப்பாட்டை,
என் "நான் தான்" என்ற மனநிலையை
இறைவனின் கரங்களில் ஒப்படைக்கும் பயணம்.
இந்த தவக்காலத்தில்,
நம்முடைய ஜெபம்
நீளமானதாக இருக்க வேண்டியதில்லை
அலங்காரமானதாகவும் இருக்க வேண்டியதில்லை
அது இது தான்
"என்னைக் கொடுக்கிறேன், ஆண்டவரே;
என்னுள் உமது வார்த்தை வாழட்டும்"
அப்போது,
என் தவம்
சடங்காக அல்ல,
வாழ்வாக மாறும்
என் காணிக்கை
பொருளாக அல்ல,
நானாக மாறும் ●

## கிறிஸ்தவ வாழ்வுப் பணிக்குழு - சிவகங்கை மறைமாவட்டம்
## தொடர் விவிலியப் போட்டி - ஜனவரி 2026

### ஐந்தாம் சுற்று : எஸ்ரா, நெகேமியா முழுவதும்

**I. ஒரே வார்த்தையில் விடையளி** 5x1=5
1. பிரித்தல் (1குறி 1:19)
2. அழிக்கும் தெய்வம் (1குறி 14:11)
3. தாவீதின் நகர் (1குறி 14:11)
4. துரோகங்களை (1குறி 10:13)
5. சிலைகளே (1குறி 16:26)

**II. கோடிட்ட இடம்** 5x1=5
1. சிரியர் (1குறி 19:19)
2. காலத்தை, தாவீதுக்கு (1குறி 21:18)
3. தொடாதீர் தீங்கிழைக்காதீர் (1குறி 17:22)
4. ஆகாபுக்கு (1குறி 16:7)
5. எதிரிகளை கை வண்மையால் (1குறி 14:11)

**III. சரியா? தவறா?**
1. சரி (நெகேமியா 1:6)
2. தவறு (நெகேமியா 2:13)
3. சரி (நெகேமியா 4:05)
4. தவறு (நெகேமியா 5:19)
5. சரி (நெகேமியா 9:15)

**IV. பொதுஅறிவு** 5x1=5
1. புனித இரண்டாம் ஜான்பால் - திருத்தந்தை-2002ல்
2. புனித அருளானந்தர்
3. ஆர்.எஸ். மங்கலம்
4. நான்கு பகுதிகள்
   i) தந்தை கடவுளைப் பற்றியது
   ii) மகன் இயேசுவைப் பற்றியது
   iii) தூய ஆவியாரைப் பற்றியது
   iv) திரு அவையைப் பற்றியது
5. எட்டு
   i) திருக்காட்சி
   ii) இயேசுவின் உயிர்ப்பு
   iii) இயேசுவின் விண்ணேற்றம்
   iv) தூய ஆவியார்
   v) திருமுழுக்கு யோவானின் பிறப்பு
   vi) திருத்தூதர்கள் பேதுரு பவுல்
   vii) மரியாவின் விண்ணேற்பு
   viii) இயேசுவின் பிறப்பு

**V. தேடி கண்டுபிடி** 5x1=5
1. எஸ்ரா 1 – 3
2. எஸ்ரா 5 – 13
3. எஸ்ரா 8 : 31
4. எஸ்ரா 60 : 10
5. எஸ்ரா 10 : 15

**VI. குறுக்கெழுத்துப் போட்டி** 10x1=10

**I. இடமிருந்து வலம்**
1. உருவங்கள் (2 குறி 7:14)
5. கைவிடுவார் (1 குறி 28:9)
10. திருமுகத்தை (2குறி 7:14)

**II. வலமிருந்து இடம்**
3. புனிதம் (2 குறி 8:11)
6. நீதி (2 குறி 1:10)
9. தகட்டால் (2 குறி 4:9)

**III. மேலிருந்து கீழ்**
2. உம் கையில் (1 குறி 29:12)
4. இதயத்தை (1 குறி 29:17)

**IV. கீழிருந்து மேல்**
7. நீர் (2குறி 6:35)
8. கல் (2 குறி 2:18)

# தவக்காலம் மன்னிப்பின் காலம்

**மன்னியுங்கள், மன்னிப்புப் பெறுவீர்கள் (லூக்கா 6:37)**

✍ சகோ. ஜெனஸ் CIC
மானாமதுரை

மன்னிப்பு என்றால் என்ன? அது ஒரு ஞாயிறு மறைக்கல்வி வழக்கத்திற்கு மாறாக ஒரு மாணவன் ஆசிரியரிடம் மன்னிப்பு மன்னிப்பு ... மன்னிப்பு... என்று நீங்கள் அடிக்கடி சொல்லுகிறீர்களே,

. உண்மையிலேயே மன்னிப்பு என்றால் என்ன? என்று சற்று விளக்கமாக கூறுங்கள் என்று கேட்டான். ஆசிரியரும் ஒரு வினாடி அழமாக சிந்தித்தார். பிறகு அவனிடம், " தன்னை காலில் போட்டு மிதிப்பவர்களுக்கு கூட மலர் நறுமணம் தருகின்றதே, அதற்குப் பெயர்தான் மன்னிப்பு" என்று கூறினார். ஆம், ஒருவர் நமக்கு எதிராக தீமை செய்தவர்களுக்கு, பதிலுக்கு தீமை செய்யாமல், நன்மை செய்வதற்குப் பெயர்தான் மன்னிப்பு.

இந்தத் தவக்காலத்தில் நாம் செய்த பாவங்களுக்காக மட்டும் மனம் வருந்தி மன்னிப்புக் கேட்பது மட்டுமல்ல, நமக்கு எதிராகக் குற்றம் செய்த நம் சகோதர, சகோதரிகளையும் நாம் அளவில்லாமல் ம ன்னிக்க வேண்டும் என்பது இயேசு நம்மிடமிருந்து எதிர்பார்க்கின்றார். மன்னிப்பது நலம். மன்னிப்பதும் மருந்தாகும். மன்னிப்பதில், நமக்கும் கடவுளுக்கும் இடையே பெரும் வித்தியாசம் இருக்கின்றது. மனிதன் அளந்து மன்னிக்கின்றான். ஆனால் கடவுளோ அளவில்லாமல் மன்னிக்கிறார். கடவுள் மனம் மாறி வருபவர்களை வரையறையின்றி மன்னிக்கின்றார். கடவுளிடமிருந்து அளப்பெரிய விதத்தில் நாம் பெற்றதை, நாம் பிறருக்கு அளிப்போம்.

யூதர்கள் நடுவில் கடவுள் மூன்று முறைகள் தான் மன்னிப்பார்கள் என்று ஒரு கருத்து நிலவியது. இதனை பேதுரு நன்றாகவே அறிந்திருந்தார். அதனால் தான், அவர் இயேசுவிடம் தான் பெருந்தன்மையானவன் என்பதை காட்டவேண்டும் என்று மூன்றோடு



மூன்றைக் கூட்டி, அத்தோடு ஒன்றைச் சேர்த்து, ஏழு முறை மட்டுமா, என்று கேட்டார். அதற்கு இயேசு, எழுபது முறை ஏழுமுறை என்றார். எனவே இயேசு பேதுருவிடம், கடவுளைப் போன்று நிபந்தனையின்றி மன்னிக்க வேண்டும் என்கின்ற புதுப்பிடிப்பினையை கற்றுக் கொடுக்கின்றார் நிபந்தனையின்றி மன்னிப்பது கடவுளை பிரதிபலிப்பதாகும். இதனை நாம் இந்தத் தவக்காலத்தில் வாழ்ந்து காட்டுவோம். கடவுள் மன்னிப்பதில் கடல் என்றால், நாம் அதில் சிறிய அலையாகவாவது அல்லது துளியாகவாவது இருக்க வேண்டுமல்லவா. எனவே மன்னிப்பதால் மட்டுமே மனதுக்கு நிம்மதி கிடைக்கும்.

தவக்காலத்தில் மன்னிப்பு கேட்பது மட்டுமல்ல, நாம் பிறரை மன்னிக்க கூடியவர்களாக இருப்போம். ஆண்டவருடைய இரக்கம் எத்தனை பெரியது, அவரிடம் மனம் திருந்துவோருக்கு அவர் அளிக்கும் மன்னிப்பு எத்தனை மேலானது" எனவே கடவுளிடமிருந்து மன்னிப்பை பெற்றவர்களாக, அதனை மற்றவர்களுக்குக் கொடுத்து உண்மையான இயேசுவின் பிள்ளைகளாக வாழ முயற்சி செய்வோம்.

ஆண்டவரின் ஆசீர் என்றும் நம்மோடு
சிலரை மறந்து விடுங்கள்...
சிலரை மன்னித்து விடுங்கள்...
சிலரைக் கடந்து விடுங்கள்...
எல்லாரையும் தூக்கி சுமக்காதீர்கள்...
உங்கள் வாழ்க்கை சுமையாகிவிடும்...

# இயற்கை அறிவியல்

✍ ஹேமலதா காளிதாஸ்
சிவகங்கை

**ஏன் இயற்கை வேண்டும்?**

"இயற்கை என்பது ரசிக்கின்ற ரசனை
மட்டும் அல்ல
மற்ற உயிர்களின் வாழ்வியலும்"

**விளக்கம்**

இயற்கையை நிந்திக்கும் போது அங்கு மற்ற ஓர் உயிரினம் அழிகின்றது. அப்போது வாழ்வியலும் உடைகின்றது அறமும் உடைகின்றது.

**இயற்கை அறிவியல்**

இங்கு அனைத்து இயற்கை ஓட்டமும் அறிவியல் சார்ந்ததே

**எ.டு**

இரவுக்கும் தூக்கத்திற்கும், உடலின் ஓட்டத்திற்கும் பல இயற்கை அறிவியல் உண்டு. இரவு நேரங்களில் நாம் தூங்கும் போது தான் தூக்கத்தில் வேலை செய்யும் உறுப்புகள் இயங்குகிறது. அதற்காக தான் இறைவன் இரவை படைத்தான்.

இரவு நேரங்களில் கண்களுக்கு வெளிச்சம் தரக்கூடாது என்பதற்கு தான் இறைவன் சூரியனையே மறைத்தார். இரவை படைத்தார். இது தான் இறைவன் படைத்த அழகான இயற்கை அறிவியல்.

தற்போது செயற்கை அறிவியலின் மேதகர்கள் செயற்கை ஒளியை படைத்து கண்ணிற்கு வெளிச்சத்தை தந்து நோயை உருவாக்கினர்.

இயற்கையை விட பெரிய அறிவியல் ஒன்றும் இல்லை. இயற்கையை ஒன்றி தான் வாழ வேண்டும். இயற்கைக்கு எதிர்மாறானவை அனைத்தும் அழிவே இவ்வுலகம் இயங்குவதற்கு ஒன்றான விதி "இயற்கை விதி" ஒன்றன விதியில் இன்னொரு விதி புகுத்தல் இயலாது (எடு-செயற்கை விதி

"விதிக்குள் படைப்புகளை படைப்பதே "அறம்"

இயற்கை என்னும் விதிக்குள்
ஒன்றே விதி "இயற்கை விதி"
ஒன்றன விதியில் இன்னொரு விதி
புகுத்தல் இயலாது...
"இயற்கணிதம் வினாக்களில் கணம்
விதியை பொருத்தினால் விடை தருமோ தராது"

**விளக்கம்**

"இயற்கணிதம்" வினாக்குள் "கணம்" விதியை பொருத்தி விடை தேடினால் கிடைக்குமா... கிடைக்காது. அதற்கேற்ப விதி உண்டு. இவ்வுலகமும் அவ்வழியே இயற்கை அறிவியல் மூலம் சுழன்று கொண்டிருக்கும் உலகை ம றறான இன்னொரு செயற்கை விதியை கொண்டு சுழற்ற முடியாது.

"இயற்கைக்கு முரண்பட்ட அனைத்தும் அசுத்தமே
அசுத்தம் என்று கேடே"

நம்மாழ்வார் ஐயா தனது கட்டுரைகளில் சொல்கின்றார் மேற்கு தொடர்ச்சி மலைகளில் உள்ள மரங்கள் காற்றை ஈர்த்து தமிழகத்தில் பருவ மழையாக பெய்கின்றது. இதுதான் இயற்கை அறிவியல் இன்று பகுத்தறிவாளர்கள் என்று சொல்லும் பல மூடர்கள் மரத்தை வெட்டி விட்டு காலிப்ளவர், முட்டைக்கோஸ் போன்ற தாவரத்தை நட்டு பருவ கால மழையை தடுத்து விட்டனர். இங்கு இயற்கை விதியை புரிந்து செயல்படாமல் செய்த செயல்களின் பலன் இது.

கணம் என்ற கணக்கில் "கணம்" விதியை கொண்டு தான் கணக்கு போட வேண்டும். அப்போது தான் அதற்கான விடை கிடைக்கும். மாறாக "கணம் கணக்கில் "இயற்கணித" விதியை கொண்டு கணக்கு போட்டால் விடை கிடைக்காது. அதே போல் இயற்கையின் விதியில் உலகம் இயங்குகிறது. மாறான செயற்கை விதியை பொறுத்தினால் நோயும் அழிவுமே

விடையாக கிடைக்கும்.

வள்ளலார் பெருமானார் கேட்கின்றார் ஏன் வாய்க்கு மேல் மூக்கு இருக்கு.

அதற்கு அவர் தந்த விடை, நாம் வாய்க்கு நேராக உணவு கொண்டு வரும் போது உணவு நன்றாக இருக்கிறதா இல்லையா கெட்டு போனதா என்று உணர்ந்து சொல்லும் இயற்கை அறிவியல்.

அன்று தமிழர்கள் எண்ணற்ற படைப்புகளை படைத்தனர் அதில் எதுவுமே இயற்கையை நிந்தித்தாக சரித்திரம் இல்லை. அதனால் தான் அவர்கள் ஞானத்தை பெற்று தன் உடம்பையும் அழியாது காத்து ஜீவசமாகி எய்தினர்.

ஊன அழிவில்லாமல் நிலைக்க செய்ய இயற்கையும், இயற்கை அறிவியலும் துணை புரிகின்றது.

தற்போது மனிதர்களின் பிழைப்புகள் இயற்கை அறிவியலுக்கு ஏற்றவாறு இல்லை. அதனைப் பற்றி "மனிதர்களின் பிழைப்பு எப்படி இருக்க வேண்டும்" என்ற தலைப்பில் கட்டுரை எழுதி உள்ளேன். அதனை தொடர்க.

**முடிவுரை**

படைப்புகள் ஒன்று இருந்தால்
படைத்தவன் ஒன்று இருத்தல் வேண்டும்
படைப்புகள் புரிந்தால் தான்
படைத்தவனை பற்றி புரியும்
படைப்புகள் புரிய வேண்டுமெனில்
இயற்கையை புரிந்து கொள்ள வேண்டும்
இயற்கை பற்றி புரிந்ததால் தான் அறம் புரியும்
அறம் புரிந்தால் தான் அறத்தோடு வாழ முடியும்
அறத்தோடு வாழ்ந்தால் தான் ஆன்மீகத்தில் வெற்றி அடைய முடியும்
இதுவே படைத்தவன் உணர்த்தும் "ஆன்மீக இயற்கை அறிவியல்"

---

## தவக்காலம்

**உலகம்**
சேமிக்கச்
சொல்கிறது

**இயேசு**
இழக்கக்
கற்றுத் தருகிறார்.

இழக்கக்
கற்றுக் கொள்வோம்!

எதை இழந்தால்
இயேசுவைப்
பெற்றுக் கொள்வோமோ
அவற்றையெல்லாம்
இழக்கக் கற்றுக்கொள்வோம்.



# கடுகு

அருள்சகோதரி. Dr. லடிஸ்கா ரோஸ்லின்,
முத்துப்பட்டி



கடுகு என்பது இந்திய சமையலில் முக்கியமாக இடம் பெறும் பொருள். மேற்கு வங்காளத்தில் இதனை வடித்து எண்ணெவாக பயன்படுத்துகின்றனர். சித்த, ஆயுர்வேத மருத்துவத்தில் மருந்தாக பயன்படுகிறது.

மண் ஈரப்பதமாகவும் நல்ல சூரிய வெளிச்சத்திலும் நன்கு வளரக்கூடியது. இது 6 முதல் 9 அடி வரை வளரும் 90 முதல் 100 நாட்களில் வளர்ந்து பயன்தரக்கூடியது. இந்தியாவில் உத்திரபிரதேசம், மேற்குவங்காளம், தமிழ்நாட்டில் சேலம் மாவட்டைச் சார்ந்த பகுதிகளில் அதிகமாக பயிராகிறது.

வேறுபெயர் : ஐயவி

**தாவரவியல் பெயர்**

Brassis Jurcea, Brassica Alba

**ஆங்கில பெயர்**

Mustard

**வகைகள்**

1. கருங்கடுகு (செங்கடுகு)
2. வெண்கடுகு

**செய்கை**

- ❖ வாந்தியுண்டாக்கி – Emetic
- ❖ வெப்பமுண்டாக்கி – Stimulet
- ❖ துடிப்புண்டாக்கி – Rubfacient
- ❖ கொப்புளமெழுப்பி – Vesicant
- ❖ செரிப்புண்டாக்கி – Diestive
- ❖ சிறுநீர்ப்பெருக்கி – Diuretic

**ஊட்டச்சத்துக்கள்**

முக்கியமான சத்துகள்

| | | |
|---|---|---|
| புரதம் | – | மக்னீசியம் |
| நார்ச்சத்து | – | வைட்டமின்கள் |
| கால்சியம் | – | ஒமேகா – 3 கொழுப்புச்சத்து |
| இரும்புச்சத்து | – | ஆண்டி ஆக்லிடென்ட்கள் |

**மருத்துவ பண்புகள்**

- ❖ செரிமானத்தை மேம்படுத்தும்
- ❖ சளி மற்றும் சுவாசப் பிரச்சினைகளுக்குச் சிறந்தது
- ❖ நோய் எதிர்ப்புச் சக்தியைத் தரும்
- ❖ உடலில் வெப்பத்தை உருவாக்கி வியர்வையைத் தூண்டும்.

**மருத்துவம்**

கடிப்பகை யெனவரு கடுகினை நாளு
மிளகில வணத்தொடு மூன்றுமொன் றாக்கி
யகுபுன மூலிகை வலியெலா மகலும்
பச்சடி முதற்கறி பண்பினா லயினு
நிச்சய மாயுணி கழ்பிணி யறுக்குமே!

கடுகு, மிளகு, உப்பு இம்மூன்றும் சம அளவு எடுத்து ( Eg தனித்னியே 5 கிராம்) அரைத்துக் கொள்ளவும். இதனை ஒவ்வொரு நாளும் விடியற்காலையில் 1 சிட்டிகை எடுத்து வாயிலிட்டு வெந்நீர் அருந்த வாதம், பித்தம், கபம் இவைகளால் ஏற்படும் துன்பங்கள் நீங்கும்.

அதாவது, தலையிடிப்பைத் தரக்கூடிய இருமல், மூக்குநீர் வடிதல், கோழை, வெறி, காணாவிடக்கடி, குடைச்சலை ஏற்படுத்தும் வலி, மந்தம், உமிழ்நீர் பிரச்சினை, கழிச்சல், வயிற்றுவலி சீதக்கடுப்பு, செரியாமை, கீல்வாயு, தலைசுற்றல், விக்கல் இவை குணமாகும்.

**நஞ்சு முறிவு**

கடுகை 2 கிராம் எடுத்து அரைத்து தண்ணீரில் கலக்கிக் கொடுக்க நஞ்சுண்டவர்களுக்கு வாந்தியாகி நஞ்சு வெளியாகும்.

**விக்கல்**

கடுகுத்தூள் 8 கிராம், வெந்நீர் 130 மிலி எடுத்து அதில் கடுகை ஊறவைத்து வடிகட்டிக் கொடுக்க விக்கல் நீங்கும். 1/2 ஸ்பூன் கடுகை எடுத்து சிறிது நீர் சேர்த்து அம்மியில் மைய அரைத்து, அதை ஒரு துணியில் தடவி

மார்புக்குழியில் போட, விரைவில் விக்கல் தணியும்.

**கீழ்வாயு, பசியின்மை**

- ❖ கடுகை வறுத்து அதனுடன் பூண்டு, மிளகாய், புளி, தேங்காய் உப்பு தேர்த்து துவையல் அரைத்து சாப்பிட கை கால் வலி, கீழ்வாயு (Jaint Pain) பசியின்மை நீங்கும்.
- ❖ வலி உள்ள இடங்களில் கடுகுடன் சிறிது பச்சரிசி சேர்த்து அரைத்து பற்றிட வலி நீங்கும்.
- ❖ கடுகுடன் முருங்கைப்பட்டை சேர்த்து அரைத்து வலி கைகால் குடைச்சலுக்கு பற்றிடலாம்.

**சூதக வலி**

- ❖ பெண்களுக்கு மாதவிடாய் காலங்களில் ஏற்படும் வலிக்கு சுக்கு, திப்பிலி, வெண்கடுகு, கார்போகரி, ஏலக்காய் அனைத்தும் 1 ஸ்பூன் எடுத்து வறுத்து பொடியாக்கி வைத்துக் கொண்டு அதில் சிறிதளவு 1/4 ஸ்பூன் எடுத்து வெந்நீர் கலந்து குடித்து வந்தால் வயிற்று வலி குறையும்.

**சளி**

- ❖ வெண்கடுகு இலைகளை அடிக்கடி உணவில் சேர்த்து வந்தால் இருமல், சளி குறையும்.
- ❖ கடுகை சிறிதளவு எடுத்து அரைத்து தேனில் கலந்து கொடுக்கலாம்.

**கடுகு உக்களி**

கடுகு வெப்ப கூரியமுடையப் பொருள் என்பதால் உடலில் பித்தத்தை அதிகரித்து வெப்பம் உண்டாகும். கடுகின் வீரியத்தை சற்று தளர்த்தி கடுகு உக்களி தயாரிக்கலாம்.

**கடுகுத்தூள் பச்சரிசி மாவு**

கடுகுத்தூள் பச்சரிமா இரண்டையும் சம அளவு எடுத்து நீர் சேர்த்து களிபோல கிண்டி துணியில் தடவி.

- வயிற்றுவலி, குடைச்சல் இவைகளுக்கு அந்தந்த இடங்களிலும்
- இருமல், இரைப்பு இவைகளுப்புகளுக்கு மார்பின் மீதும்.
- தலைவலி, நீர் இவைகட்கு பிடரியின் மேலும்
- கெண்டைச்சதை பிறழ்ச்சிக்க, கால் கெண்டைச் சதையின் மேலும் போட குணமாகும்.

**கடுகுத் தைலம்**

கடுகை இடித்து சிறிது கற்கண்டு, வெந்நீர் சேர்த்து செக்கில் நெருக்கிப் பிழிந்து எடுப்பது தற்கால வழக்கம். முன்னோர்கள் இடித்து நீர் சேர்த்து காய்ச்சி நீரின் மீதும் படிந்துவரும் எண்ணெயை சேகரித்து எடுத்துக் கொள்வர்.

கடுகு எண்ணெய் சற்று மஞ்சள் நிறமும், நெடியும், விறுவிறுப்பும் உடையது உடலில் படும் போது சிலருக்கு கொப்பளிக்கும்.

வட இந்தியாவின் ஒரு சில பகுதிகளில் கடுகு எண்ணெயை சமையலுக்கு பயன்படுத்துகின்றனர். இதிலுள்ள ஒமேகா 3 கொழுப்பு அமிலங்கள் இதய ஆரோக்கியத்தை மேம்படுத்தி செரிமானத்தைத் தூண்டுகிறது.

தென் தமிழகத்தில் மக்கள் பெரும்பாலும் இதனை மூட்டுவலி, கை கால் வலி, வீக்கம் இவற்றிற்கு புற மருந்தாகவே பயன்படுத்துகின்றன.

**குறிப்பு**

கடுகு வெப்ப வீரியமுடைய பொருள் என்பதால் பித்த உடலினர், கர்ப்பிணிப் பெண்கள் அளவோடு பயன்படுத்த வேண்டும்.

**பழமொழி**

கடுகு, சிறுத்தாலும் காரம் குறையாது, சிறிய கடுகு விதை, சமையலில் சேர்க்கப்படும்போது அதன் காரத்தன்மையும் மனத்தையும் குறைக்காமல், சுவையை அதிகரிக்கும் வல்லமை கொண்டது. அதுபோல், ஒருவரின் வயது, உயரம், தோற்றம் போன்றவை முக்கியமல்ல. அவர்களின் திறமையே முக்கியம்.

தமிழகத்தில் பெரும்பான்மையான சமையலில் கடுகு தாளித்தல் என்பது வழக்கத்தில் உள்ளது. இத்தகைய மேன்மை வாய்ந்த கடுகிலும் தற்போது மரபனு மற்றங்கள் நடைபெற்று வீரிய ரக கடுகு உற்பத்தி செய்யப்பட்டு வழக்கில் உள்ளது என்பது உண்மை.

# குடியரசு தலைவரின் அதிகாரங்கள் என்ன?

(ஜனவரி 26 - குடியரசு தினம்)

நல்லாசிரியர் கவிஞர். **எல். பிரைட்**
இராம்நகர், தேவகோட்டை

நமது அரசாங்க அமைப்பு பிரிட்டிஷ் பாராளுமன்ற முறையொட்டி வடிவமைக்கப்பட்டது என்பது நாம் அறிந்ததுதான். பிரிட்டனில் அரசர் அல்லது அரசியர் அரசுத் தலைவராக இருக்கிறார்கள். பிரிட்டிஷ் மன்னரின் நிலையும் அதிகாரத்தையும் போலவே எறத்தாழ நமது ஜனாதிபதியும் நிர்வாக முறையைப் பெற்றிருக்கிறார்.



இந்திய ஜனாதிபதியின் நிலை அமெரிக்க ஜானதிபதியின் நிலையைப் போல் தோற்றமளித்தாலும் இருவருக்கும் பெரிய அளவில் வேறுபாடு உள்ளது. அமெரிக்க ஜனாதிபதி நிர்வாகத் துறையின் தனிப்பெரும் தலைவராக இருக்கிறார். ஆட்சி அவரிடம் நிலைபெற்றிருக்கிறது. இந்திய ஜனாதிபதியினர் நிலை நாம் ஏற்கனவே சுட்டிக்காட்டியதைப் போல பிரிட்டிஷ் மன்னரின் நிலையையே ஒத்திருக்கிறது. இவர் அரசுத் தலைவரேயன்றி நிர்வாகத் தலைவரல்லர். இவர் நாட்டின் பிரதிநிதியேயேன்றி நாட்டை ஆள்பவரல்லர், என்றாலும் ஜனாதிபதயின் ஒப்புதலும், ஒத்துழைப்பும் இல்லாமல் ஒரு அரசாங்கம் சீரிய முறையில் செயல்படமுடியாது என்கிற அளவிற்கு நமது நாடு அவருக்கு அதிகாரங்களைப் பரவலாகக் பகிர்ந்தளித்திருக்கிறது. நமது அரசியலமைப்பு, ஜனாதிபதிக்கு வழங்கியிருக்கும் அதிகாரங்கள் மிகப் பல, அவற்றை நாம் நிர்வாக அதிகாரங்கள், சட்டமியற்றும் அதிகாரங்கள் இடர்கால அதிகாரங்கள் என பிரிக்க முடியும்.

**நிர்வாக அதிகாரங்கள்**

அரசிலமைப்புச் சட்டம் 53-வது பிரிவின்படி யூனியன் பகுதிகளை ஜனாதிபதி நேரிடையாகவோ அல்லது அவரது பிரதிநிதிகளான கவர்னர்கள் மூலமாகவோ நிர்வகிக்கும் அதிகாரத்தைப் பெற்றிருக்கிறார். முப்படைகளின் தலைவராகவும், பொறுப்பு வகிக்கிறார். ஜானதிபதி பிரதமமந்திரியையும், அமைச்சரவை உறுப்பினர்களையும் அமர்த்துகிறார். இந்திய அரசாங்க அலுவல்களைச் செயல்படுத்த விதிகளை வகுக்கிறார். அமைச்சர்களுக்கு அலுவல்களைப் பகிர்ந்து கொடுக்கிறார். இவர் அட்டர்னி ஜெனரலையும், தலைமை நீதிமன்றப் பிரதம நீதிபதியையும், மற்ற நீதிபதிகளையும் தேர்தல் கமிஷனர்களையும் இந்தியாவின் மாபெரும் கணக்கர் - பரிசோதனைகரையும், ஷெட்யூல்டு வகுப்பினர், பின்தங்கிய வகுப்பினர், சிறுபான்மையினருக்கான கமிஷனர்களையும், கவர்னர்களையும், யூனியன் பிரதேசங்களின் பிரதமகமிஷர்களையும் நிதிக்கமிஷன் உறுப்பினர்களையும், அனைத்து அரசின் கவுன்சிலையும் நியமிக்கிறார். சுருங்கச் சொன்னால் எல்லா நியமனங்களும் ஜனாதிபதியின் பெயராலோ அல்லது அவர் அதிகாரத்தாலோ செய்யப்படுகின்றன. அரசியலமைப்பின் 72-வது பிரிவு ஜனாதிபதிக்கு மன்னிப்பு வழங்க அதிகாரம் கொடுத்திருக்கிறது.

இதன்படி ஜனாதிபதி ஒரு இராணுவ நிதிமன்றத்தால் தண்டனை அல்லது குற்றத்தீர்ப்பு அளிக்கப்படும் போதும். இபி.பி.கோ சட்டங்களை மீறிய குற்றத்திற்காகத் தண்டனை அல்லது குற்றத் தீர்ப்பு அளிக்கப்படும் போதும், குற்றத்தீர்ப்பு மரணத்தீர்ப்பாக உள்ளபோதும் தண்டனையை மன்னித்தல், தடுத்தல், நிறுத்துதல் அல்லது தவிர்த்தல் செய்யவும் குற்றப்படுத்தப்பட்ட ஒருவடைய குற்றத்தீர்பபை நிறுத்தவும், தவிர்க்கவும் மாற்றவும் அதிகாரம் உடையவர் ஆகிறார். மரணத்

தீர்ப்புகளை மாற்றும் அதிகாரத்தை அரசியலமைப்பு ஜனாதிபதிக்கும் அவரது பிரதிநிதிகளான கவர்னர்களுக்கும் வழங்கியிருக்கிறது. ஒரு குறிப்பிட்டவரின் கருணை விண்ணப்பத்தைக் கவர்னர் ஏற்காவிடில் அவர் ஜனாதிபதியின் கருணையை நாடலாம்.

**சட்டமியற்றும் அதிகாரங்கள்**

சட்டமியற்றும் துறைகளில் அரசியலமைப்பு ஜனாதிபதிக்குச் சிறப்பான அதிகாரங்களை வழங்கியிருக்கிறது. பாராளுமன்ற மசோதாக்கள் சட்டமாக ஜனாதிபதி பாராளுமன்றச் சட்டமியற்றும் நடைமுறைகளில் கலந்து கொள்ளும் நிலையைக் காணலாம். ஜனாதிபதி பாரளுமன்றத்தின் இருசபைகளையும் கூட்டலாம். அவைகளின் தொடர் கூட்டத்தைத் தள்ளி வைக்கலாம். மக்கள் சபையை அவர் கலைக்கலாம். இவர் பாராளுமன்றத்தின் இருசபைகளிலும், தனித்தனியாக உரை நிகழ்த்தலாம். அல்லது இருசபைகளின் கூட்டுக் கூட்டத்தில் உரை நிகழ்த்தலாம். இருசபைகளுக்கும் செய்திகள் அனுப்பலாம். ஜனாதிபதி ராஜ்ஹசபைக்குப் பன்னிரெண்டு உறுப்பினர்களை நியமிக்கிறார். ஆங்கிலோ - இந்திய வகுப்பினர் இருவரை இவர் மக்கள் சபைக்கு உறுப்பினராய் நியமிக்கலாம். பாராளுமன்றத்தில் நிறைவேறிய மசோதாக்கள் ஜானதிபதியின் இசைவினைப் பெற அனுப்பப்பட வேண்டும். பணமசோதாக்கள் நீங்கலாக மற்ற மசோதாக்களுக்கு இசைவு தராமல் நிறுத்தி வைக்கவோ, மறுபடியும் ஆராயுமாறு பாராளுமன்றத்திற்கு அனுப்பவோ இவருக்கு உரிமை உண்டு. இவருடைய சிபாரிசு இல்லாமல் எந்தவொரு நிதிமானியக் கோரிக்கையும் பாராளுமன்றம் வழங்காது. பாராளுமன்றத்தின் கூட்டங்கள் நடைபெறாத இடைக்காலத்தில் ஜனாதிபதி அவரசச் சட்டங்களைப் பிரகடனம் செய்யலாம்.

இவ்வித சட்டங்கள் பாராளுமன்றத்தின் சட்டத்தையொத்த பயனும் திறனும் உடையனவாயிருக்கும். ஆனால் அத்தகைய சட்டங்கள் பாராளுமன்றத்தின் இரு சபைகளின் முன்னிலையிலும் வைக்க வேண்டும். பாராளுமன்றம் மறுபடியும் சபையின் 6 வாரம் முடிந்தவுடன் அல்லது அக்காலம் முடிவடைவதற்கு முன் அவசரச் சட்டத்தை ஒத்துக்கொள்ளலாகாது என்னும் தீர்மானங்கள் இருசபைகளிலும் நிறைவேற்றப்பட்டிருந்தால் அந்த அவசரச் சட்டம் செயலற்றுப் போகும். ஜனாதிபதி எந்தச் சமயத்திலும் அவரது அவசரச் சட்டத்தை நீக்கிவிடலாம்.

எனவே பாராளுமன்றம் கூடாதவரை அவசரச் சட்டம் செயல்படும். பாராளுமன்றத்தின் இரண்டு தொடர் கூட்டங்களுக்கிடையேயுள்ள காலம் 6 மாதங்களுக்கு மேல் இருக்கக் கூடாதென அரசியலமைப்புக் கூறுவதால் இந்த அவசரச் சட்டம் 6 மாதத்திற்கு மேல் உ யிர் பெற்றிருக்க முடியாது எனலாம். பாராளுமன்றம் கூடியதும் அவசரச்சட்டம் நீங்கிவிடாது இருசபைக்கும் கூடிய பின் அவைகள் அவசரச்சட்டத்தை ஏற்கவில்லையென்றால் அது நீங்கும்.

**இடர்கால அதிகாரங்கள்**

ஜனாதிபதி இடர்கால நிலையைக் (நெருக்கடி நிலையை) யூனியன் பிரதேச ஆட்சிப் பொறுப்பில் உள்ள ஒரு பகுதிக்கோ, இந்தியா முழுபகுதிக்கோ பிரகடனம் செய்யலாம். பேரச்சம் இருக்கிறதாகவோ, வெளியார் தாக்குதல் பற்றியோ, உள்நாட்டுக் குழப்பநிலை பற்றியோ இடர்நிலை ஏற்படலாமென்று ஜனாதிபதி கருதினால் இவ்விடர்கால நிலையைப் பிரகடனம் செய்யலாம். அது தவிர யூனியன் அரசுகளில் ஏதொன்றிலாவது அரசியலமைப்பு முறிவு ஏற்படின் ஜனாதிபதி இடர்காலப் பிரகடனம் செய்வார். நிதிநிலை முடிவுகளையொட்டிய நெருக்கடிகள் ஏற்படும் பொழுதும் ஜனாதிபதி இவ்வதிகாரத்தைப் பயன்படுத்தி இடர்காலப் பிரகடனம் செய்வார். மேலெழுந்தவாறு ஜனாதிபதியின் அதிகாரங்களைப் பார்க்கும் போது சாதாரணமானதாய்த் தோன்றலாம். இவ்வளவு அதிகாரங்களை வேறெந்த அரசியலமைப்பும் அரசத் தலைவருக்கு வழங்கவில்லை.

# புனித வின்சென்ட் தே பவுல் சபை

**மத்திய சபையின் செயற்குழு கூட்டம் நாள் 10:01.2026**

புனித வின்சென்ட் தே பவுல் சிவகங்கை மத்திய சபையின் செயற்குழு கூட்டம் 10.01.2026 சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வியான்னி அருட்பணி மையத்தில் தலைவர் சகோ. பெர்னாட்ஷா அவர்களின் தலைமையில் ஆவியானவர் பாடலுடன் தொடங்கியது கூட்டத்திற்கு வியான்னி அருட்பணி மையத்தின் இயக்குனரும் சபையின் ஆன்மிக ஆலோசகரும் அருட்பணி. செபஸ்தியான் அடிகளார் முன்னிலையிலும் நடைபெற்றது. கூட்டத்திற்கு மத்திய சபை பொறுப்பாளர்கள், வட்டார சபைத் தலைவர்கள், மகளிர் பிரதிநிதி அனைவரும் வந்து கலந்து கொண்டனர். கூட்டத்தில் சபையின் வளர்ச்சிக்கு என்னென்ன செய்யலாம், கோப்புகள் எவ்வாறு பராமரிக்க வேண்டும், வரவு செலவு கணக்கு எவ்வாறு எழுத வேண்டும் மேலும் பிப்ரவரி மாதத்தில் எல்லா கிளைச் சபைகளிலும் தணிக்கை செய்ய வேண்டும் போன்ற கருத்துக்கள் பேசப்பட்டது. மேலும் கூட்டத்தில் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டு மதிய உணவுடன் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

**புனித வின்சென்ட் தே பவுல் மத்திய சபை, சிவகங்கை**
**புனித வின்சென்ட் தே பவுல் கிளைச்சபைகளின் சார்பாக கிறிஸ்துமஸ் மற்றும் புதுவருட பிறப்பை முன்னிட்டு ஏழைக் குடும்பங்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.**

| வ. எண் | உதவி வழங்கிய தேதி | கிளைச்சபை | உதவி வழங்கியது மற்றும் பங்கு கொண்டவர்கள் |
|---|---|---|---|
| 1. | 25.12.2025 | புனித ஜெபமாலை அன்னை கிளைச்சபை, இராமநாதபுரம் | 20 ஏழைக்குடும்பங்களுக்கு அரிசி மற்றும் மளிகை பொருட்கள்,இனிப்பு ஆகியவற்றை பங்குத்தந்தை வட்டார சபை தலைவர், கிளைச்சபை தலைவர் மற்றும் பொறுப்பாளர்கள் இணைந்து வழங்கினார்கள். |
| 2. | 28.12.2025 | புனித குழந்தை தெரசாள் ஆலயம் செஞ்சை, காரைக்குடி | 110 ஏழைகளுக்கு போர்வை மற்றும் உடைகளை பங்குத்தந்தை கிளைச்சபை தலைவர், உறுப்பினர்கள் இணைந்து வழங்கினார்கள் |
| 3. | 28.12.2025 | புனித அந்தோணியார் கிளைச் சபை, மானகிரி | அருட்சகோதரிகளால் பங்கில் பராமரித்துவரும் தூய வளனார் தத்துமையத்திற்கு சுமார் 4600/- மதிப்புள்ள போர்வை மற்றும் மளிகைப் பொருட்கள் கிளைச்சபை தலைவர் பொறுப்பாளர்கள் இணைந்து வழங்கினார்கள் |
| 4. | 11.01.2026 | புனித குழந்தை தெரசாள் ஆலயம், செஞ்சை, காரைக்குடி | ஜெபமாலை அறக்கட்டளை நிதியிலிருந்து செல்வி. செல்வராணி என்ற ஏழைப் பெண்ணுக்கு திருமண உதவியாக ரூபாய் 10000/- ஐ பங்குத்தந்தை, அவர்கள் வழங்கி சிறப்பித்தார்கள் |
| 5. | 14.01.2026 | புனித ஜெபமாலை அன்னை கிளைச்சபை, இராமநாதபுரம் | 14.01.2026 போகி பொங்கல் அன்று ரோட்டு ஓரங்களில் வசிக்கும் 15 முதியவர்களுக்கு உணவு, போர்வை, புதிய உடைகள் ஆகியவற்றை பங்குத்தந்தை, கிளைச்சபை தலைவர், மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து வழங்கினார்கள். |

**புனித வின்சென்ட் தே பவுல் மத்திய சபை, சிவகங்கை**
**மேதகு ஆயர் அவர்களுக்கு புதுவருட பிறப்பை முன்னிட்டு நன்றி தெரிவிக்கப்பட்டது**

புனித வின்சென்ட் தே பவுல் மத்திய சபை சிவகங்கையின் தலைவர் சகோ. பெர்னாட்ஷா செயலர் சகோ. அலெக்ஸாண்டர், பொருளாளர் சகோ. அமிர்தசாமி, திட்ட அலுவலர், சகோ. சூசை ராஜ் ஆகியோர் புதுவருட பிறப்பன்று மேதகு ஆயர். லூர்து ஆனந்தம் அவர்களை நேரில் சென்று சந்தித்து பொன்னாடை அணிவித்து புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்தார்கள். பிறகு தலைவர் பெர்னாட்ஷா மற்றும் பொறுப்பாளர்கள் அனைவரும் இணைந்து வட்டார சபை தலைவர்கள், பொறுப்பாளர்கள் கிளைச்சபை தலைவர்கள், பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள், மகளிர் பிரதிநிதி, இளம் வின்செந்தியர்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்து தெரிவித்து, இந்த புத்தாண்டில் கிளைச் சபைகள் அதிகப்படியான ஏழை மக்கள், நோயாளிகள், ஏழை மாணவ மாணவியர்களை நேரில் சென்று சந்தித்து அவர்களுக்கு தேவையான உதவிகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

## வட்டார சபைகளில் நடத்தப்பட்ட சபையின் கூட்டங்கள்

| வ. எண் | கூட்டம் நடந்த தேதி | கூட்டம் நடத்தப்பட்ட கிளைச்சபை | கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் |
|---|---|---|---|
| 1. | 04.01.2026 | ஏ.ஆர். மங்களம் புனித அந்தோணியார் கிளைச்சபை (ஆர்.எஸ். மங்களம் வட்டாரம்)<br>மூன்று பயனாளிகளுக்கு ரூ. 30,000/- நிதி உதவி வழங்கப்பட்டது. | வட்டார சபைத் தலைவர். சகோ. ஸ்தனிஸ்லாஸ்,<br>பங்குத்தந்தை அருட்பணி. அன்பரசு<br>மத்திய சபை பொறுப்பாளர்கள்<br>சகோ. பெர்னாட்ஷா, தலைவர்<br>சகோ. அலெக்ஸாண்டர், செயலர்<br>சகோ. அமிர்தசாமி, பொருளாளர்<br>வட்டார சபைப் பொறுப்பாளர்கள் மற்றும் கிளைச்சபைத் தலைவர்கள், பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள் |
| 2. | 18.01.2026 | அரியக்குடி வளன்நகர் கிளைச்சபை (காரைக்குடி வட்டார சபை) | வட்டார சபை தலைவர் சகோ. ஜெபமாலை<br>மத்திய சபை பொறுப்பாளர்கள்<br>சகோ. அலெக்ஸாண்டர், செயலர்<br>சகோ. அமிர்தசாமி, பொருளாளர்<br>வட்டார சபைப் பொறுப்பாளர்கள் மற்றும் கிளைச்சபைத் தலைவர்கள், பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள்,<br>இளம் வின்செந்தியர்கள் |

காளையார்கோவில் புனித அருளானந்தர் திருவிழா அன்று (31.01.2026) சிவகங்கை மறைமாவட்ட மேதகு ஆயர் மேதகு லூர்து ஆனந்தம் அவர்களிடம் ஆனந்தா நண்பகல் உணவுத் திட்டத்திற்கு நிதியாக ரூ.5,000/- காளையார்கோவில் புனித அருளானந்தர் கிளைச்சபை சாபாக தலைவர் சகோ. ஆரோக்கியசாமி செயலாளர், சகோ. ஜோசப், பொருளாளர் சகோ. பால்ஜோசப், வட்டார சபைத் தலைவர் சகோ. அருள் மற்றும் உறுப்பினர்கள் இணைந்து வழங்கினார்கள்.

## திருமண முன்தயாரிப்புப் பயிற்சி வகுப்புகள்
### பிப்ரவரி - 2026

| எண் | தேதி | கிழமை | இடம் |
|---|---|---|---|
| 1. | 19.02.2026, 20.02.2026 | சனி, ஞாயிறு | T. சூசையப்பர்பட்டணம் பங்கு, தங்கச்சிமடம் |

அருள்பணி. **ஸ்டீபன்,** செயலர், குடும்ப நலவாழ்வுப் பணியகம்